விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 022 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 26 வெள்ளிக்கிழமை (10.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

அன்பு வாசகர்களே!
இன்று உங்கள் வலம்புரியுடன் 2025ஆம் ஆண்டுக்கான
தெய்வீக வர்ணக் கலண்டர்
தவறாது முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள்

## ரூ.4,691 பில்லியன்
### 2025ஆம் நிதியாண்டுக்கான அரச செலவாக ஒதுக்கீடு

(கொழும்பு)
2025 ஆம் நிதியாண்டுக் கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத் தில் அரசின் செலவு 4,691 பில்லியன் ரூபாயாக மதிப் பிடப்பட்டுள்ளது. ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பிரதமர் ஹரிணி அமரசூரியவால் நேற்று வியா ழக்கிழமை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த ஆண்டு ஜனவரி முத லாம் திகதி தொடங்கி டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரையிலான காலப் 15

## மண்ணெண்ணெய் உட்கொண்ட ஒரு வயது ஆண் குழந்தை கோப்பாயில் மரணம்

(யாழ்ப்பாணம்)
வீட்டுக்குள் இருந்த மண் ணெண்ணெயை தவறுத லாக உட்கொண்ட ஒரு வயது நிரம்பிய ஆண் குழந்தை ஒன்று பரிதாபமாக உயிரி ழந்த சம்பவமொன்று கோப்பாய் மத்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த தரிசிகன் சஜின் என்ற ஆண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

நேற்று வியாழக்கிழமை நண்பகல் தாயார் சமைத்துக் கொண் 15

## புன்னாலைக்கட்டுவனில் ஹயஸ் - மோ.சைக்கிள் விபத்து
### குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
புன்னாலைக்கட்டுவனில் இடம்பெற்ற ஹயஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் ஏழாலை வடக்கைச் சேர்ந்த சங்கரப் பிள்ளை ஜெயசங்கர் (வயது- 59) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை நள் ளிரவு, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத் 15

# இன, மத வன்முறைக்கு என்றுமே இடமில்லை

### ஞானசார தேரரின் சிறைத்தண்டனை தொடர்பில் பிரதமர் ஹரிணி



(கொழும்பு)
இன, மத வன்முறைக்கு நாட்டில் இனி என்றுமே இடமில்லை என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரி வித்துள்ளார்.

இஸ்லாம் மதத்தை அவமதித்த குற்றத்துக்காகப் பொது பலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு 9 மாத சிறைத் தண்டனையை கொழும்பு நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளமை 15

## இஸ்லாமுக்கு எதிரான கருத்து
### ஞானசார தேரருக்கு 9 மாத சிறை

(கொழும்பு)
இஸ்லாம் மதத்தை அவமதித்த குற்றச்சாட் டில் பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் 09 மாத சிறைத்தண்டனை விதித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக 1500 ரூபாய் அபராதம் விதிக்கப்படும் என கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன உத்தரவிட் 15

## யாழ்ப்பாணக் காணிகளை உரிமை கோரும் சிங்களவர்கள்
### சபையில் சிறீதரன் எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)
யாழ்ப்பாணத்தில் தங்களுக் குக் காணி வேண்டுமென்று கொழும்பைச் சேர்ந்த சில சிங்களவர்கள் விண்ணப்பம் செய்துள்ளனர் என்று பாராளு மன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், 15

## இரண்டு புதிய நீதியரசர்கள் சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)
இரண்டு புதிய மேன்முறை யீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் நேற்று ஜனாதிபதி செயலகத் தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முன்னிலையில் பதவியேற்றுள்ளனர்.

அதன்படி, சட் 15

## பொலிஸார் மக்களை தாக்க முடியாது
### பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால



(கொழும்பு)
பொதுமக்கள் மீது பொலிஸார் ஒருபோதும் தாக்குதல் நடத்த முடியாது என 15

கைகளுக்கும் மனதுக்கும் நிறைவைத் தரும் சிறிய அளவிலே நன்மைகள் அதிகம்
நாளாந்த செலவுகளுக்கு
அத சம்பத

வாங்கி உயர்வடைவோமா?
ஆங்கில எழுத்துக்கு ரூ.80
02 இலக்க நிரைக்கு ரூ.1,000
03 இலக்க நிரைக்கு ரூ.4,000
04 இலக்க நிரைக்கு ரூ.50,000
ஆங்கில எழுத்து மற்றும் 04 இலக்கங்களுக்கு ரூ.250,000
284 சீட்டிழுப்புக்களிலே
ரூ.250,000 வெற்றியாளர்கள் 497
ரூ.50,000 வெற்றியாளர்கள் 11,547
NLB தேசிய லொத்தர்
(C-033)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்றி காக்கும் உங்கள் நாளிதழ்



# பன்னிரு மாதமதில் பாலாய் பொங்கும் உன் நினைவுகள்....

## அமரர் பாலசுந்தரலிங்கம் மதனகுமார்

(உத்தியோகத்தர் – இலங்கை வங்கி, ஒட்டிசுட்டான்)

தோற்றம் : 31.10.1982 மறைவு : 23.12.2023

பசுபதீஸ்வரர் அருள்நிறை
பருத்தி நகரில் தேசத்தின் வங்கியாம் இலங்கை வங்கியில்
பாங்குடன் தொடங்கினாய் பயனுறு சேவையை
பாமர மக்களுக்கும் விளங்க வைத்தாய்
வங்கியின் சேவைதனை
பாரபட்சமற்ற சேவையால் பாராட்டுக்கள் பெற்றாய்
சாவகச்சேரியில் சான்றோரும் போற்ற
சளைக்காத சேவை செய்தாய்
சாந்தமுடன் தென்மராட்சியின் தென்றலாய் மிளிர்ந்தாய்
அச்சுவேலியில் அரும்பணி செய்து வங்கிக்காய் உழைத்தாய்
அறிவின் உச்சத்தைத் தொட்டு
அறிஞர் போற்ற பட்டமும் பெற்றாய்
அளித்தனர் உனக்கு அளவிலா பாராட்டை
கொடிகாமத்தில் கொடிகட்டிப் பறந்தாய் அனைவரும் போற்ற
கொழும்பில் இருந்து உன்னைத்தேடி வந்தது பதவியில் உயர்ச்சி
ஒட்டிசுட்டான் அழைத்தது உன்னை
ஓங்கிய வாஞ்சையுடன் அரும்பணியாற்றி
ஓர்மமாய் பணிபுரிந்து ஒன்றித்தாய் வங்கியுடன்
ஓரிருமாதமதில் ஓசை கொடுத்து அழைத்தானோ கண்ணன்
ஓய்விலாத உன் சேவை ஓய்ந்தது!
ஒன்றும் அறியாமல் தவித்தனர்
உடன்பணி செய்தோர்
ஒன்றித்தாய் வைகுண்ட ஏகாதசியில் இறைவனுடன்!
உன்னத சேவையை உயிர்ப்புடன் ஆற்றினாய் சமூகத்திற்காய்
உலகமுள்ள வரை இலங்கை வங்கியில்
உன்சேவை "மைல்கல்" ஆய் மிளிரும்.

கலைமகள் இல்லம்,
தம்பசிட்டி,
பருத்தித்துறை.

Contact : 021 226 3733

நினைவில் மறவா
மைத்துனர் வரதராசா குடும்பத்தினர்
(லண்டன்)

(C-1991)

# 2ஆம் ஆண்டு நினைவேந்தல்

## அமரர் கைலாசபிள்ளை சீவரத்தினம் (பஞ்சலிங்கம்)

(யா/ வேம்படி மகளிர் கல்லூரி, யா/ மத்திய கல்லூரி முன்னாள் ஆசிரியர்)



தோற்றம் 01.04.1950 மறைவு 10.01.2023

முந்தை நற்தவங்கள் பலகோடி செய்தோம்
எந்தையாய் இறைவனாய் எல்லாமாய் எங்களை
முந்தியிருப்ப அவை தனிலே முழுதாய்
முயன்றாய் ஜெயம் கொண்டாய்.

மழைக்குக் குடையாய் பசிநேரத்துக்குணவாய் எம் வாழ்வில் இலக்கணமாய்
எல்லாமாய் இருந்தீர்கள் இரண்டாண்டாய் தேடுகின்றோம்
சிந்தா குலம் தீர்ந்து செம்மையாய் நாம் வாழ
நந்தா விளக்காய் நகர்ந்து வழி நடந்திடுக.

நெஞ்சில் என்றும் நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதில் அதிபர்களுக்கு நியாயம் வழங்குங்கள்!

## பதில் அதிபர்கள் சங்கம் பிரதமரிடம் கோரிக்கை



(கொழும்பு)

பாடசாலைகளில் கடமைப் பொறுப்பில் இருக்கும் பதில் அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரியவை அகில இலங்கை பதில் அதிபர்கள் சங்கத்தின் தலைவர் எல். லட்சுமணன் தலைமையிலான குழுவினர் கல்வி அமைச்சில் சந்தித்து எடுத்துக் கூறியுள்ளனர்.

இது குறித்து பதில் அதிபர்கள் சங்கத்தின் தலைவர் எல். லட்சுமணன் தெரிவிக்கையில்,

இலங்கையின் கல்வி வளர்ச்சியில் பதில் அதிபர்கள் என்ற பதவி மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. பதில் அதிபர்கள் என்ற பதவி நிலையில் இருந்து தரம் பெற்றவர்களே அதிபர்களாகவும் கல்வி நிர்வாக சேவையிலும் உயர் பதவிகளை வகித்தும் வந்துள்ளார்கள். இவ்வாறு பதில் அதிபர்களாக மூன்று வருடங்கள் கடமையாற்றியவர்கள் 2012 ஆம் ஆண்டு வரையில் அதிபர் சேவைத் தரத்திற்கு உள்வாங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அதன் தொடர்ச்சியாக 2012 ஆம் ஆண்டு விசேட தரத்தில் அதிபர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

இலங்கையிலுள்ள பாடசாலைகளில் மூன்றிலொரு பாடசாலைகளைக் கொண்டு நடத்துவதில் பதில் அதிபர்கள் பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளார்கள்.

தற்போதைய நிலையில் நாடு முழுதும் 1800 இற்கும் அதிகமான பாடசாலைகள் பதில் அதிபர்களின் பொறுப்பிலேயே நிர்வகிக்கப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு அதிபர் போட்டிப் பரீட்சையின் ஊடாக அதிபர்கள் நியமனம் பெற்றார்கள். அப் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு கீழ் புள்ளிகளைப் பெற்றவர்கள் தங்களையும் அதிபர் சேவைத் தரத்திற்கு உள்வாங்க வேண்டும் என உயர்நீதிமன்றில் 2018 ஆம் ஆண்டு வழக்குதாக்கல் செய்தார்கள்.

இந்நிலையில் பாடசாலைகளை நிர்வகித்து வந்த பதில் அதிபர்கள் நியாயம் வேண்டி பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் எதுவித சாதகமான நடவடிக்கைகளும் இடம்பெறவில்லை. இதன் காரணமாக மனதளவில் மிகுந்த பாதிப்பினை எதிர்நோக்கினோம். இந்நிலையில் எமக்கு நியாயம் வேண்டி 2023 ஆம் ஆண்டு உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

மேற்குறித்த வழக்குகள் மற்றும் இவ்விடயத்தோடு தொடர்புபட்ட ஏனைய வழக்குகளையும் இணைத்த வகையிலேயே உடன்பாட்டின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்தவர்கள் நேர்முகத் தேர்வின் அடிப்படையில் அதிபர் சேவைத் தரத்திற்கு உள்வாங்கப்பட்டார்கள். இவ்வாறு உள்வாங்கப் பட்டவர்கள் உதவி அதிபர்களாகவே நியமிக்கப்பட்டார்கள்.

இந்நிலையில் உதவி அதிபர்களாக நியமிக்கப்பட்டவர்களைக் கொண்டு பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிக்கும் பிரயத்தனம் இடம்பெற்றமை கவலைக்குரிய விடயமாகும்.

நாடு முழுவதும் மூன்று வருடங்களுக்குக் குறைந்த சேவையை வழங்கிய பதில் அதிபர்களிடமிருந்து பாடசாலை நிர்வாகம் மீளவும் பெறப்பட்டது.

ஊவா மாகாணத்தில் ஐந்து வருடங்களுக்கு குறைந்த பதில் கடமை புரிந்த அதிபர்களும் பாதிக்கப்பட்டார்கள்.

வடமாகாணத்தில் மூன்று வருடங்களுக்கு மேலாகவும் கடமையாற்றிய சகல பதில் அதிபர்களிடமிருந்தும் பலவந்தமாகப் பாடசாலைகள் பெறப்பட்டு புதிய அதிபர்கள் நியமிக்கப்பட்டமை கவலைக்குரியது.

கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் கஷ்ட, அதிகஷ்ட பாடசாலைகளைப் பாதுகாப்பதிலும், பாராமரிப்பதிலும் மிகுந்த பங்களிப்பைச் செய்து வரும் பதில் அதிபர்களின் நிலைமையைக் கருத்திற் கொண்டும் அவர்களது மனநிலையை உணர்ந்தும் பொருத்தமான நடவடிக்கையினை மேற்கொண்டு நியாயம் வழங்குமாறு வேண்டுகிறோம் என்று இக் குழுவினர் பிரதமரிடம் கோரிக்கை முன்வைத்தனர். (நி)

# பிறந்த நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 10.01.1966 மறைவு: 01.01.2008

### திரு. தியாகராசா மகேஸ்வரன்

(முன்னாள் இந்து கலாசார அமைச்சரும்
யாழ்., கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்)

அப்பா ......
இன்று உங்கள் பிறந்த நாள்
நீங்கள் இன்றிருந்தால்
எங்களுக்கு திருநாள் அல்லவோ
இதயமெல்லாம் சிறகடிக்க
நாம் இருந்திருப்போமல்லவா.......
இதயங்கள் நொருங்க
இறைவன் பறித்துவிட்டான்...
இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள் அப்பா..
இறைவனோடு கொண்டாடுங்கள்.

பிள்ளைகள்:
பவதாரணி (மகள்), பிரணவன் (மகன்), பவித்திரா (மகள்)

தகவல்: திருமதி விஜயகலா மகேஸ்வரன்
இல.32, 36ஆவது ஒழுங்கை, கொழும்பு-06.
தொலைபேசி: 2360679
இல.276, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-2221877

(C-032)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம்! பணம்!! பணம்!!!



**பழைய காஞ்சிபுரம் பட்டுப் புடைவைகள், பனாரஸ் பட்டுப் புடைவைகள் எந்த நிலையில் இருந்தாலும் வாங்கப்படும்.**

(2984)

**குறிப்பு : இந்தச் சலுகை(11.01.2025,12.01.2025, 13.01.2025) சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை ஆகிய மூன்று நாட்கள் மட்டுமே.**

**வாரீர், வாரீர்**

**பொன்னான வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள்**

தொடர்புகட்கு.:

**Mobile : 075 946 6407**
**Whatsapp: 91 866 721 0812**

**இடம் : GER - CEY GUEST HOUSE**
**120 1/1, Hospital Road, Jaffna.**


# மரண அறிவித்தல்



## கந்தையா இரவீந்திரன்

(ஓய்வுபெற்ற கிராம அலுவலர் J/ 191 இணுவில் மேற்கு, சமாதான நீதவான்)

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இரவீந்திரன் அவர்கள் நேற்று (09.01.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற வனஜா அவர்களின் அன்புக் கணவரும் அருண்பிரசாத் (ஆய்வு கூட உதவியாளர் - யாழ்.பல்கலைக் கழகம்), சோபிகா (ஆசிரியர் - மு/கைவேலி கணேச வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிறூபிகா (கணக்காளர்) அவர்களின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான குலேந்திரா (உதவி அரசாங்க அதிபர்), சத்தியமூர்த்தி (தபாலதிபர்), கமலவேணி, சத்தியவேணி, விஜயவேணி, அருள்சோதி மற்றும் சுந்தரமூர்த்தி (MLT), சண்முகேந்திரன் (பெற்றோலியக் கூட்டுத்தாபனம்), கலாவதி (ஓய்வு பெற்ற ஆசிரியர்) ஆகியோரின் சகோதரரும் தயாபரன் (பிரான்ஸ்), பிரபாவதி, மகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (10.01.2025) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்: குடும்பத்தினர்
077 659 7482

(C-1996)

## புதிய யாப்பை நிச்சயம் உருவாக்குவோம் - சபாநாயகர்

புதிய அரசமைப்பை இயற்றுவதற்கு பாராளுமன்றத்தால் வழங்கப்பட வேண்டிய முழுப் பங்களிப்பையும் வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். இதற்கு எதிரணிகளும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என நம்புகின்றோம் என சபாநாயகர் வைத்திய கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

நாட்டில் பலமான ஆளுங்கட்சி உள்ளது. எனவே, புதிய அரசமைப்பை இயற்றுவதற்குரிய வேலைத் திட்டத்தை முன்னெடுத்து அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தால், சட்டவாக்க சபையில் அதனை நிறைவேற்றிக்கொள்வதற்குரிய பங்களிப்பை வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

புதிய அரசமைப்பு அவசியம் என நாட்டு மக்களும் கருதுகின்றனர். இதற்குரிய மக்கள் ஆணையும் வழங்கப்பட்டுள்ளது என்றார். (ம-7)


# மலிவு விலையில்

பாடசாலை மாணவர்களுக்கான (SOCKS) காலுறைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை நலன்புரிச் சங்கங்களுக்கு விஷேட கழிவு வழங்கப்படும்.

(C-1998)

**076 315 6470**


# கண்ணீர் அஞ்சலி

## கந்தையா இரவீந்திரன்

(ஓய்வு பெற்ற கிராம அலுவலர் J/ 191 இணுவில் மேற்கு, சமாதான நீதவான்)



இணுவில் மேற்கு, இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட
**கந்தையா இரவீந்திரன்**
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-2000)

செட்டி வீதி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

முருகையா குடும்பம்,
இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை,
யாழ்ப்பாணம், இலங்கை.

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர் திருமதி
**ரூபனா சிவகரன்**
அவர்களின் அன்புத் தந்தையார்

## அமரர். முத்து அகிலேஸ்வரன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி

(C-1995)

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்,**
**யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை**

# இளம் தவில் வித்துவானுக்கு இதய அஞ்சலிகள்

## அமரர் விஜயகுமார் மணிகண்டன்



பேரனார் அமரர் சின்னராஜா, தந்தையார் "லயஞானதிலகம்" விஜயகுமார், சிறிய தந்தையார் "கலைப்பரிதி" சதீஸ்குமார் வழியில் தவில் மேதையாக மிளிர்வாய் என்று காத்திருந்தோம், பெருமை கொண்டோம்.

இளங்கோ கழக மேடைகளில் உன் குரல் ஒலித்தபோது சற்று இறுமாப்பும் கொண்டோம்.

*என்னே கொடுமை!*
*ஏற்க மறுக்கிறது மணிகண்டா!!*
*இதயத்தால் அஞ்சலிக்கிறோம்!!!*

"கலைக்கோயில்"
சின்னத்தாய்,
புலோலி மேற்கு, புலோலி.

(1994)

கலாபூஷணம்
**ப.பரராஜசிங்கம் (பப்பா)**
(பிரதம ஆலோசகர் - அகில இலங்கை இளங்கோ கழகம்)
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டாவை மோதிய டிப்பர்

(தருமபுரம்)

கிளிநொச்சி A-9வீதி கரடிப்போக்கு சந்தியில் வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பட்டாரக வாகனத்தை அதிவேகமாக வந்த டிப்பர் வாகனம் மோதிய சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

குறித்த சம்பவத்தில் பட்டா ரக வாகனம் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் வர்த்தக நிலையங்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பாகக் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8-316)


## பெயர் மாற்ற அறிவித்தல்

பொற்கொல்லர் வீதி, மட்டுவில் கிழக்கு. சாவகச்சேரியில் வசிக்கும் கந்தசாமி சவுந்திரேஸ்வரி எனும் பெயரை இன்று முதல் சகுந்தலேஸ்வரி என பெயர் மாற்றம் செய்கிறேன். எனவே இனிவரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ்சனநாயகக் குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

கந்தசாமி சகுந்தலேஸ்வரி

(2972)

## விண்ணக வாழ்வின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 28.09.1942

கர்த்தரின் அடியில் 10.01.2023



அமரர். ஞானசிரோன்மணி இராசரத்தினம்

அவர்கள் 10.01.2023 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்பாலும் பண்பாலும் எங்களை அரவணைத்து
நல்வழிப்படுத்திய அன்புத்தாயே ! ஆண்டு இரண்டு ஆனாலும்
ஆறவில்லை உங்கள் பிரிவின் துயரம்
நினையாத நேரத்தில் மின்னல் போல எம்மைவிட்டுப்
பிரிந்து சென்றாலும் தங்கள் வழிகாட்டல்களும்
அன்பான நினைவுகளும் எப்பொழுதும் எங்களுடன்
கூட இருக்கும், உருவமாய் இல்லாத போதிலும் உணர்வுகளாய்
எங்களுடன் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்.

(527)

40/4 விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
T.P- 077 399 6947 / 077 273 7848

## கண்ணீர் அஞ்சலி



எமது மதிப்புக்குரிய ஆசிரியர், அதிபர்
திருமதி.பிரான்சிஸ்கா சின்னத்துரை
அவர்களின் அன்புக் கணவர்

திரு.அல்பிரட் நவரத்தினம் சின்னத்துரை

(ஓய்வுநிலை தபாலதிபர். மருதடி வீதி. யாழ்ப்பாணம்)

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத் துயரில் பங்குகொள்ளும்: பழைய மாணவர்கள்,
யா/மண்டைதீவு மகா வித்தியாலயம்.


# இராசிபலன்

10.01.2025
மார்கழி 26, வெள்ளிக்கிழமை
ஏகாதசி முற்பகல் 10.12 மணிவரை
கார்த்திகை பிற்பகல் 1.49 மணிவரை

சுபநேரம் 6.33-8.03 மணிவரை
இராகுகாலம் 11.03-12.33 மணிவரை
சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம்
கெர்ப்போட்ட முடிவு

சந்திராஷ்டமம் - சித்திரை, சுவாதி

வளவன்

**மேஷம்** – பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள்.

**ரிஷபம்** – உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**மிதுனம்** – அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**கடகம்** – வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பணப்புழக்கம் கூடும்.

**சிம்மம்** – குடும்பத்தில் மங்கள நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி** – தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்** – மறதியால் ஒரு சில பணிகளைச் செய்யாமல் விட்டு விடுவீர்கள், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்** – விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, திடீர் பயணங்கள் நன்மை தரும், போசன சுகமுண்டு.

**தனுசு** – இனத்தார் பகைமாற எடுத்த முயற்சிகள் கைகூடும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வியாபார விரோதம் விலகும், வருமானம் திருப்தி தரும்.

**மகரம்** – வழிபாட்டில் ஆர்வம் கூடும், ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்** – பெற்றோர் மீது பிரியம் கூடும், சுப செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புக் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு, கௌரவமான நாள்.

**மீனம்** – பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம்.

பொய்யன் உண்மை சொல்லும் போதுகூட யாராலும் நம்பப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுரவின் பெயரைக் கூறி வலுக்கட்டாயமாக நிதி சேகரிப்பு

## நெல்லியடியில் சம்பவம்

(கரணவாய்)

தேசிய மக்கள் சக்தியினதும் அநுரகுமார திஸாநாயக்கவினதும் பெயரைப் பயன்படுத்தி நிதிச் சேகரிப்பில் ஈடுபட்ட மனித உரிமைகள் செயற்பாட்டாளர் என தம்மை அறிமுகப்படுத்திய மதபோதகர் உட்பட இருவரை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்ததையடுத்து கடுமையாக எச்சரிக்கை செய்த பின் விடுவித்துள்ளனர்.

நெல்லியடிப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நெல்லியடிநகரில் நிதி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த போது நிதி கொடுக்க மறுத்தவர்களை ஜனாதிபதி அநுரவின் ஒளிப்படத்தைக் காண்பித்தும் அவரின் பெயரைக் கூறி அச்சுறுத்தி நிதியை வலுக்கட்டாயமாகப் பெற முற்பட்ட போது வர்த்தகர் களுக்கும் நிதிசேகரிப்பில் ஈடுபட்டோருக்குமிடையில் தர்க்க நிலை ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து அங்கு கூடிய வர்த்தகர்கள் குறித்தநபர்களை மடக்கிப்பிடித்து நெல்லியடி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் குறித்த நபர்களை கடுமையாக எச்சரிக்கை செய்த பின் விடுவித்துள்ளனர். (6-60)

# கலாசாலையில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கற்று வெளியேறி, பரீட்சைத் திணைக்களம் நடத்தும் இறுதித் தேர்வில் சித்தியடைந்த 150 ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கலாசாலை ரதி லட்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கி வைப்பார். (6-33)



ஈழத்து எழுத்தாளர் தீபச்செல்வன் எழுதிய சயனைட் நாவல் வெளியீட்டு நிகழ்வு சென்னை வடபழனியில் உள்ள பிரசாத் லாப்பின் பிரமாண்ட திரையரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

# காரைநகர் கடற்பகுதியில் 10 இந்திய மீனவர்கள் கைது

## பெருமளவான மீன்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். காரைநகர் கடற்பரப்பினுள் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 10 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளதுடன் அவர்களிடம் இருந்து பெருந்தொகை மீன்களையும் கைப்பற்றியுள்ளனர்.

காரைநகர் கடற்பகுதியில் நேற்று முன்தினம் இரவு சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட மீனவர்களையும் அவர்களின் படகையும் கடற்படையினர் காங்கேசன்துறை கடற்படை முகாமிற்குக் கொண்டு சென்றுள்ளனர்.

அதனையடுத்து மேலதிக சட்ட நடவடிக்கைக்காக அந்நபர்களைக் கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.(6-33)

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி

## கொடிகாமத்தில் கையெழுத்து வேட்டை



(யாழ்ப்பாணம்)

பல வருடங்களாக விசாரணை எனும் பெயரில் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி முன்னெடுக்கப்பட்டு வரும் கையெழுத்துப் போராட்டம் நேற்றுக் கொடிகாமம் பேருந்துத் தரிப்பிடத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளையும், புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகமயப் படுத்தப்பட்ட பின்னர் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட பின்பும் மீண்டும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகளையும் புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தியே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டத்திற்குக் கொடிகாமப்பகுதி மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் ஆதரவளித்து கையெழுத்துக்களை வைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (6)

# செயற்குழு கூட்டமும் கௌரவிப்பும்



ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் செயற்குழு கூட்டத்தில் வாழ்நாள் சாதனையாளர் விருதுபெற்ற ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் **அல்ஹாஜ்.என்.எம்.அமீன் அவர்கள்** கலாபூஷணம் பரீட் இக்பால் அவர்களால் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம் நடத்தும் இரத்ததான முகாம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே குறித்த இரத்ததான முகாமில் தன்னார்வலர்களைக் கலந்து கொண்டு குருதித் தானம் வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 250 | 200 | 150-250 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 800 | 900 | 1000 | 750-900 | 800 |
| தக்காளி | 400 | 400 | 400 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 220 | 200-250 | 200 |
| கோவா | 180 | 200 | 250 | 250 | 300 |
| கரட் | 200 | 250 | 300 | 300 | 300 |
| பூசணி | 140 | 180 | 150 | 140 | 200 |
| புடோல் | 200 | 250 | 200 | 250 | 250 |
| வாழைக்காய் | 150 | 140 | 120 | 100-150 | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 380 | 200-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 220 | 180 | 350 | -- | 250 |
| பாகற்காய் | 600 | 700 | 600 | 500-600 | 800 |
| வெண்டக்காய் | 150 | 350 | 200 | 250 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 140 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 400 | 600 | 400 | 400-500 | 400 |
| லீக்ஸ் | 420 | 380 | 300 | 330 | 400 |
| பீற்றூட் | 600 | 450 | 500 | 400 | 600 |
| கறிமிளகாய் | 800 | 650 | 600 | 700 | 800 |
| முருங்கைக்காய் | 2000 | -- | 1600 | -- | -- |
| போஞ்சி | 300 | 300 | 400 | 350-400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 150 | 200 | 200 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 150 | 50-80 | 200 |
| தேசிக்காய் | 300 | 300 | 200 | 200-250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 100-180 | 180-280 |
| இராசவள்ளி | 500 | 600 | 600 | 750 | 600 |
| வெங்காயப்பூ | 650 | 650 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 200 | 200 | 200 | 150 | 300 |
| பொன்னாங்காணி | 120 | 100 | 180 | 100 | 60 |
| [illegible] | 60 | 70 | 100 | 90 | 80 |
| [illegible] | 100 | 100 | 100 | 80 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




கல்வி அமைச்சின் விஞ்ஞானக்கிளை, இலங்கை விஞ்ஞான வளர்ச்சிச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் நடாத்திய **Little Agriculturist** ஆராய்ச்சி செயற்றிட்டத்தில் பங்குபற்றி கடந்த **12.12.2024** அன்று கொழும்பு பல்கலைக்கழகத்தில் **'Gold'** சான்றிதழ் பெற்ற எமது பாடசாலையின் (தரம் - 8) மாணவர்களாகிய **வி.சாரங்கன் , ம.தனுஜன்** ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். (2955)

**பாடசாலைச் சமூகம் – யா/ செங்குந்த இந்துக்கல்லூரி**


# யாழ் மாபெரும் உயர்கல்விக் கண்காட்சி

JAFFNA EDUCATION FAIR 2025
Your Future Begins Here...
5TH EDITION

- வெற்றிகரமாக ஐந்தாவது ஆண்டாகவும் யாழ்ப்பாணத்தின் மிகப்பெரிய உயர் கல்விக் கண்காட்சி
- உலகின் சிறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் உள்ளூர் உயர்கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகளை நேரில் சந்திக்கலாம்
- A/L 2024 உயர்தர பரீட்சை முடிந்துவிட்டு அடுத்த கட்டத்தை நோக்கி நகரும் உங்களுக்கு சிறந்த தெரிவுகள்.
- நீங்கள் வெளிநாட்டில் குடிபெயர அல்லது உயர் கல்வியை தொடர திட்டமிட்டிருந்தால், உங்களுக்கு சிறந்த களம்
- இலவச புலமைப்பரிசில்கள்
- உடனடி அனுமதிகளுக்கு சிறப்பு தள்ளுபடிகள் என இன்னும் பல சலுகைகள்.



**11th & 12th JANUARY 2025**
**9.00 am to 5.00 pm**
**அனுமதி இலவசம்**
**VALAMPURI HOTEL JAFFNA**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!!**

விபரங்களுக்கு அழையுங்கள் | 0775656633 0722600620


# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, உப அலுவலகம், உரும்பிராய் ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் உரும்பிராய் உப அலுவலத்திற்குட்பட்ட வட்டாரம் 03, சிவன்வீதியில், ஆதன இலக்கம் 170 இல் T.குமாரசாமி உ.கோ. சம்மிக்கேல்தேவாலயம் எனும் பெயரில் அமைந்துள்ள ஆதனத்தினை குணசிங்கம் லினின் எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்யும் பொருட்டு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆதனமானது வடமாகாணம், யாழ்மாவட்டம் பிரதேச செயலர் பிரிவு கோப்பாய் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, உரும்பிராய் கோவிற்பற்று உரும்பிராய் கிழக்கு இறை, கிராமஅலுவலர்பிரிவு J/266இல், "தச்சன்கடவையும் தச்சன்தோப்பும் கோடாலியான்கலட்டியும் தச்சன்கலட்டியும் தச்சன் புலமும்" இதன் உறுதி இலக்கம் 537ஆனது பிரசித்த நொத்தாரிசு சிவசுப்பிரமணியம் ஜோதிலிங்கம் என்பவரினால் 2021.07.13ஆம் திகதி எழுதப்பட்டது. இவ் உறுதி நன்கொடை உறுதியாக காணப்படுகின்றது. உறுதியில் பரப்பளவு 1 பரப்பு 11.63 குளி இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.கே.சிவானந்தன் அவர்களின் 2021.07.04 ஆம் திகதிய 5456 ஆம் இலக்க நிலஅளவைப்படத்தில் துண்டு 3 எனக் காட்டப்பட்டுள்ளது. இது உரும்பிராய் கிழக்கு குணசிங்கம் கைம்பெண் அமலோற்பவம் என்பவரினால் அவரது மகனான குணசிங்கம் லினினுக்கு வந்தடைந்துள்ளது. இதன் கிழக்கு- இராசநாயகம் யோகராஜாவின் ஆதனம் வடக்கு- சாயல் பெண் சுதர்சினியின் ஆதனம் மேற்கு- துண்டு 1, தெற்கு- அனோட்ராஜ் பெண் அகல்யாவின் ஆதனம் வடமேற்கு மூலையில் இருந்து சிவன்வீதிக்கு செல்லும் 10 அடி அகல பாதையில் பாவிப்புரித்தும் எனக் காட்டப்பட்டுள்ளது.

குணசிங்கம் கைம்பெண் அமலோற்பவம் என்பவரிற்கு 5566 ஆம் இலக்க 2020.02.03 ஆம் திகதிய திரு. ஜொணி சுவின்ரன் அனிற்ரஸ் மதரநாயகம் யாழ்ப்பாண மேல்நீதிமன்ற பிரசித்த நொத்தாரிசு என்பவரினால் எழுதப்பட்ட அறுதி உறுதி இதன் பரப்பளவு 03 குளி8.11 இது இவ் ஆதனத்தை மேன்மை தாங்கிய யாழ் கத்தோலிக்க ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவரினால் வந்தடைந்துள்ளது. இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் திரு A.கந்தசாமி அவர்களின் 2019.10.26 ஆம் திகதிய 5602ஆம் இலக்க நிலஅளவைப்படத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ளது.

5407ஆம் இலக்க 2019.11.18 ஆம் திகதிய திரு. ஜொணி சுவின்ரன் அனிற்ரஸ் மதரநாயகம் யாழ்ப்பாண மேல்நீதிமன்ற பிரசித்த நொத்தாரிசு என்பவரினால் எழுதப்பட்ட வெளிப்படுத்தல் உறுதியானது மேன்மை தாங்கிய யாழ் கத்தோலிக்க ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவரினால் யாழ்.திருச்சபை சார்பில் வெளிப்படுத்தப்பட்டது. யாழ்ப்பாண மாவட்ட கத்தோலிக்க திருச்சபைக்கு சொந்தமான ஆலய ஆதனத்தில் தமது திருச்சபையானது முப்பது வருடங்களுக்கு மேலாக எதுவித தங்குதடைகள் இன்றி ஆட்சியில் இருந்து வருகின்றது என்றும் குறித்த ஆதனத்திற்கு இலங்கை ஆட்சியுரிமைச் சட்டத்தின் 3ஆம் பிரிவுக்கமைய ஆட்சியுரிமை பெற்றுள்ளது என்றும் குறித்த ஆதனத்தை கத்தோலிக்க திருச்சபையும் உரித்தாளரும் தத்துவகாரரும் என்றென்றைக்கும் தமது சொந்த ஆதனமாக ஏற்று ஆண்டனுபவித்து வருவார்கள் எனவும் இவ்ஆதனம் எச்சாதன மூலமும் பராம்பராதீனம் செய்யப்படவில்லை என வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் பரப்பளவு 03 குளி8.11 எனக் காட்டப்பட்டுள்ளது. இதற்கு முற்பட்ட உறுதிகள் எதுவும் காணப்படவில்லை.

எனவே இவ்வாதனத்தினை குணசிங்கம் லினின் என்ற பெயரில் ஆதனப்பதிவேட்டில் பதிவது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் தகுந்த சட்டரீதியான ஆவணங்களுடன் 2025.01.25ஆம் திகதிக்கு முன்னர் (14 நாட்களுக்குள்) சபைக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது குணசிங்கம் லினின் என்ற பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சினைகளையும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதனையும் விநயமுடன் அறியத்தருகின்றேன்.

(சி-2973)

**செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பத்தார்.**

# யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து) பதவி வெற்றிடம்

மேற்படி சங்கத்தில் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்காக தகைமையுள்ளவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி:- விற்பனை உதவியாளர் (வெற்றிடம் 01)**

**குறியீட்டு இல:- 308/17**

**சம்பளத்திட்டம்:-** 16515-130*10-145*10-19265

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**
**கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம் / 08 ந்தர கல்விச் சான்றிதழ்**

**ஏனைய விபரங்கள்**

01. வயதெல்லை 18-45 (சங்கப்பணியாளர்களுக்கு இவ் வயதெல்லை பொருத்தமற்றது)
02. இப்பதவிக்குரிய அடிப்படைச் சம்பளத்தை விட மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் சுற்று நிரூபத்திற்கமைய இதர படிகளும் காலத்துக்காலம் அங்கீகரிக்கப்படும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
03. குறித்த பதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சங்கத்தினால் கோரப்படும் பிணையிணைச் செலுத்துதல் வேண்டும்.
04. ஏற்கனவே கூட்டுறவு சங்கம் ஒன்றில் கடமையாற்றும் ஊழியர் அச்சங்கத்தின் ஊடாகவே விண்ணப்பித்தல் வேண்டும்.
05. தகைமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேற்படி பதவிக்கு தங்களினால் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்கவும் அத்துடன் கடித உறையின் இடதுபக்க மூலையில் விண்ணப்பிக்கும் உரிய பதவியைக் குறிப்பிட்டு தலைவர், யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) இல. 330 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்குப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ 2025.01.24 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்.** (2971)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## கூட்ட நெரிசலில் சிக்கி திருப்பதியில் அறுவர் உயிரிழப்பு



(டில்லி)

திருப்பதியில் வைகுண்ட ஏகாதசி நாளையோட்டி சொர்க்க வாசல் திறப்புக்கான இலவச தரிசன அனுமதிச் சீட்டு விநியோகம் இடம் பெற்றுள்ளது.

இந்த இலவச தரிசன அனுமதிச்சீட்டுக்களை வாங்குவதற்காக ஆயிரக் கணக்கான பக்தர்கள் குவிந்ததால் அங்கு கடும் கூட்ட நெரிசல் ஏற்பட்டதுடன் இந்தக் கூட்ட நெரிசலில் சிக்கி 6 பேர் உயிரிழந்த துடன் மேலும் பலர் படு காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவனையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு திருப்பதி தேவஸ்தான அதி காரிகளை தொடர்பு கொண்டு விசாரித்து பாதிப்பு அடைந்தவர்களுக்கு தேவையான உதவிகளையும், உயர்தர சிகிச்சைகளையும் வழங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (நி)

## பகவத் கீதை மீது பதவிப்பிரமாணம் எடுத்த அமெரிக்க எம்.பி



(வோஷிங்டன்)

அமெரிக்க பாராளு மன்றில் விர்ஜினியா மாகாணத்தில் இருந்து தேர்வான, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுஹாஷ் சுப்பிரமணியம், இந்துக்களின் புனித நூலான பகவத் கீதை மீது பதவி பிரமாணம் எடுத்து கொண்டார்.

அமெரிக்காவில் சமீபத்தில் நடந்த தேர்தலில் குடியரசுக்கட்சி சார்பில் போட்டியிட்ட முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார்.

எதிர்வரும் 20 ஆம் திகதி அந்நாட்டின் ஜனாதிபதியாக அவர் பதவி யேற்க உள்ளார். இந் நிலையில், அமெரிக்க பாராளுமன்றில் புதிதாக தேர்வான உறுப்பினர்கள் பதவி பிரமாணம் எடுத்துக் கொள்ளும் நிகழ்வு நேற்று முன்தினம் நடந்தது. இதில், விர்ஜினியா மாகாணத்தில் இருந்து ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிட்டு வென்ற, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுஹாஷ் சுப்பிரமணியம் நேற்று முன்தினம் பதவி பிரமாணம் எடுத்து கொண்டார்.

அப்போது, இந்துக்களின் புனித நூலான பகவத் கீதையை வைத்து, அவர் பதவியேற்றுக் கொண்டார்.

இதற்கு முன் ஹவாய் பகுதியில் இருந்து தேர்வான இந்திய வம்சாவளியைச் சேர்ந்த துளசி கப்பார்டு, பகவத் கீதை மீது பதவி பிரமாணம் எடுத்து கொண்டார். சுஹாஷ் சுப்பிரமணியம், ஒபாமா ஜனாதிபதியாக இருந்த போது, அவரின் ஆலோசகராக பணியாற்றி உள்ளார். இவரது தந்தை சென்னையையும், தாய் பெங்களூரையும் சேர்ந்தவர்கள். (நி)

## 126 பேரை பலி கொண்ட நிலநடுக்கத்துக்கு பின்

## திபெத்தில் 515 முறை நில அதிர்வுகள்



(பீஜிங்)

திபெத்தில் நேற்று முன் தினம் காலை மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது.

நிலநடுக்கம் பூமிக்கு அடியில் 14 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

சீனாவின் தன்னாட்சி பெற்ற பிராந்தியமான திபெத்தை பயங்கர நில நடுக்கம் உலுக்கியது. திபெத்தின் புனித நகரங்களில் ஒன்றான ஷிகாட்சேவை தாக்கிய இந்த நில நடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.8 புள்ளிகளாக பதிவானது.

இந்த நிலநடுக்கம் ஷிகாட்சே நகரம் மற்றும் அதனையொட்டிய பகுதி களைக் கடுமையாக உலுக்கியது. வீடுகள் உட்பட ஏராளமான கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகின. கட்டட இடிபாடுகளில் சிக்கி 126 பேர் பலியாகினர். மேலும் 200இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

கட்டட இடிபாடுகளில் இன்னும் பலர் சிக்கியிருப்பதால் தொடர்ந்து மீட்பு பணிகள் நடந்து வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே திபெத்தில் முதலில் 6.8 புள்ளிகள் என்ற அளவில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தை தொடர்ந்து, அடுத்தடுத்து 500 இற்கும் அதிகமான முறை நிலஅதிர்வுகள் ஏற்பட்டதாக சீனாவின் நில நடுக்க வலையமைப்பு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஜனவரி 8 ஆம் திகதி காலை 8.00 மணி நிலவரப்படி, மொத்தம் 515 அதிர்வுகள் பதி வாகியுள்ளன.

இதில் 488 நிலஅதிர்வு கள் ரிக்டர் அளவுகோலில் 3.0 புள்ளிகளுக்கு கீழே இருந்தன. 24 நிலஅதிர்வு கள் 3.0 முதல் 3.9 புள் ளிகள் வரையிலும், 27 நிலஅதிர்வுகள் 4.0 முதல் 4.9 புள்ளிகள் வரையிலும் பதிவாகின" எனத் தெரி விக்கப்பட்டுள்ளது. (நி)

## பற்ற

## அவச

- 5 பேர் உயிரி
- சுமார் 50 பே
- அழிவை சந்தி
- தீயை கட்டுப்

(வோஷிங்டன்) —
அமெரிக்காவின்
காட்டுத் தீயானது
டன், நூற்றுக்கண
100,000 இற்கும்
வும் கட்டாயப்படுத்



## உக்ரை

## வான் த

## நடத்திய

(கீவ்)

உக்ரைன் நாட்டின் ஜபோரிஜியாவில் ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் கிட்டத்தட்ட 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

30 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர் என

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# லொஸ்ஏஞ்சலஸில்

# ...றி எரியும் காட்டுத்தீ!

## ...சர காலநிலை பிரகடனம்!

...ரிழப்பு

...பர் படுகாயம்

...ிந்த 100 இற்கும் மேற்பட்ட வீடுகள்

...ப்படுத்தும் முயற்சி தீவிரம்



**...ன் லொஸ்ஏஞ்சல்ஸைச் சூழ்ந்த ...் 5 பேரின் உயிரை காவு கொண்டது ...ணக்கான வீடுகளை அழித்தது, ...ம் மேற்பட்ட மக்களை வெளியேற்ற ...ந்தியது.**



இதனிடையே, தீ விபத்தினை கட்டுப்படுத்தும் முயற்சியில் தீயணைப்பு வீரர்களும், விமானப் படையினரும் போராடி வருகின்றனர்.

சூறாவளி காற்று தீயை அணைக்கும் நடவடிக்கைகளுக்கு இடையூறாக அமைந்ததுடன், இதன் தாக்கம் காரணமாக கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்த தீயானது வேகமாக பரவியது.

தற்போது தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பல ஹொலிவுட் நட்சத்திரங்கள் வசிக்கும் லொஸ் ஏஞ்சல்ஸின் அழகிய புறநகர்ப் பகுதியான பசுபிக் பாலிசேட்ஸ் சுற்றுப்புறத்தில் புதன்கிழமை தீ வேகமாக பரவியது.

தீப்பரவலினால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டடங்கள் ஏற்கனவே அழிக்கப்பட்டுள்ளதாக தீயண்ணப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், லொஸ்ஏஞ்சலிஸ் - கவுண்டியில் 46 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு மின்சாரம் தடைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் காட்டுத்தீ காரணமாக சுமார் ஒரு லட்சம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளனர். காட்டுத்தீயால் 50 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை காற்றின் வேகம் குறையாததால் கலிபோர்னியாவில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்படுவதாக ஆளுநர் கவின் நியூசம் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஙி)

# ...ரன் மீது ...ாக்குதல் ...ப ரஷ்யா





உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கி தகவல் தெரிவித்தார்.

இது குறித்து எக்ஸ் தளத்தில் அவர் பகிர்ந்துள்ள வீடியோவில், இரத்த காயம் அடைந்த மக்கள் வீதியில் வைத்து அவசர படையினர் முதலுதவி சிகிச்சை அளிக்கும் காட்சிகளும் தீயணைப்புத் துறையினர் தீயை கட்டுப்படுத்தும் பணிகளில் ஈடுபடும் காட்சிகளும் இடம்பெற்று இருக்கின்றன.

அத்துடன், "ரஷ்யர்கள் ஐபோரிஜியா மீது வான் வழி குண்டுகளை வீசி தாக்கினர்.

இது நகரத்தின் மீது வேண்டுமென்றே நடத்தப்பட்ட தாக்குதல்.

இதுவரை டசின் கணக்கில் மக்கள் காயமடைந்துள்ளதாக கூறப்படுகிறது. அனைவருக்கும் தேவையான உதவிகள் செய்யப்படுகின்றன.

துரதிர்ஷ்டவசமாக, 13 பேர் கொல்லப்பட்டனர். "அவர்களின் குடும்பத்தினருக்கும் அன்புக்குரியவர்களுக்கும் எனது இரங்கல்கள்.

துரதிர்ஷ்டவசமாக, உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும். சாதாரண பொதுமக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதை அறிந்தும், ஒரு நகரத்தின் மீது வான்வழி குண்டுகளை வீசுவதை விட கொடூரமானது எதுவும் இல்லை."

"ரஷ்யா அதன் பயங்கரவாதத்திற்காக அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். உக்ரைனில் உயிர்களைப் பாதுகாக்கும் முயற்சிகள் ஆதரிக்கப்பட வேண்டும். வலிமையின் மூலம் மட்டுமே அத்தகைய போரை நீடித்த அமைதியுடன் முடிவுக்குக் கொண்டுவர முடியும்." என்று கூறினார். (ஙி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரிய சக்தி, இலங்கையின் எதிர்காலத்திற்கான புதிய பாதை

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு

உலகம் இன்று பருவநிலை மாற்றங்களின் கடுமையான விளைவுகளை எதிர்கொண்டு வருகின்றது. வெப்பநிலை அதிகரிப்பு, கடல் மட்ட உயர்வு, வறட்சி மற்றும் கடும் மழை போன்ற காலநிலை மாற்றங்கள் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றன. நிலக்கரி மற்றும் மசகுஎண்ணெய் போன்ற எரிபொருட்களைப் பாவிப்பதன் மூலம் வெளியேறும் கார்பன் வாயுக்கள் இந்த பருவநிலை மாற்றத்துக் கான முக்கியகாரணியாக விளங்குகிறது.

இந்தப் பேரழிவை எதிர்கொள்ள, புதுபிக்கதக்க சக்தி (Renewable Energy) மூலங்கள் மீதான தேவை கணிசமாக அதிகரித்துள்ளது. சூரியன், காற்று மற்றும் நீர் போன்ற இயற்கை வளங்களை பயன்படுத்தி உருவாக்கப்படும் இந்த சக்தி மூலங்கள் சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பில்லாத, நிலையான மற்றும் எதிர்காலத் தலைமுறைகளுக்குப் பயன்படக்கூடியதான ஒரு மாற்றாக விளங்குகிறது. புதுபிக்கத்தக்க சக்தி மூலங்களில் சூரிய சக்தி மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. அண்மைய நாட்களில், சூரிய ஒளியை மின்சாரமாக மாற்றும் தொழில்நுட்பம் பாரிய வளர்ச்சி அடைந்து வருகிறது, இதன்மூலம் சூரிய ஒளியை மின்சாரமாக மாற்றும் திறன் அதிகரித்து வருகிறது.

சூரிய மின்சக்தி உற்பத்தியின் போது சூழலுக்குத் தீங்கு விளைவிக்கும் எந்தவிதமான வாயுக்களும் வெளிவிடப்படுவதில்லை. எனவே இது தூய்மையான நிலைத்த சக்தி மூலமாகக் காணப்படுகிறது.

இலங்கை பூமியின் மத்திய கோட்டிற்கு அருகில் அமைந்துள்ள வெப்பமண்டல நாடு. ஆகவே அது ஆண்டு முழுவதும் அதிக அளவிலான சூரிய ஒளியைப் பெறுகின்றது. இலங்கை முழு வதும் உள்ள எல்லாப் பகுதிகளும் குறிப்பிடத்தக்க சூரிய ஒளிவீச்சை பெறுகின்றன. உலகளாவிய கிடைமட்ட ஒளிவீச்சு (GHI) 1247 kWh/m2 முதல் 2106 kWh/m2 வரை இது மாறுபடுகின்றது. இவ்வாறு தொடர்ச்சியாக சூரிய ஒளியைப் பெறுகின்றமையால் இலங்கை குறிப்பாக சூரிய ஒளியை பயன்படுத்தி புதுப்பிக்ககூடிய சக்தியை உற்பத்தி செய்ய மிகுந்த திறனைக் கொண்ட நாடாகும். சூரிய சக்தியைப் பயன்படுத்தி தனது மின்சார தேவையை பூர்த்தி செய்வதன் மூலம் நிலக்கரி மற்றும் மசகுஎண்ணெய்களின் பயன்பாட்டைக் குறைத்து சுற்றுச் சூழலை பாதுகாப்பதுடன் அந்நியச் செலவாணியைக் குறைத்து அவற்றை நாட்டினுள் சேமிப்பதற்கும் இலங்கை அரசு மற்றும் தனியார் துறைகள் இணைந்து சூரிய சக்தி துறையில் பெரும் முதலீடுகளை மேற்கொண்டு வருகின்றன. இக்கட்டுரை இலங்கையில் சூரிய சக்தி பயன்பாட்டின் வளர்ச்சி அதன் தற்போதைய நிலை, எதிர்கால தடைகள் தொடர்பாக விரிவாக ஆராய்கிறது.

உலகளாவிய அளவில் புதுப்பிக்கத்தக்க சக்தி குறித்து விழிப்புணர்வு அதிகரித்த 1980களில் இலங்கையில் சூரிய சக்தி தொழில்நுட்பத்தில் தொடக்க ஆர்வம் ஏற்பட்டது. அக்காலத்தில் இலங்கை அதிகளவில் நீர்மின் மற்றும் எரிபொருள் சார்ந்த மின் உற்பத்தியை அதன் மின்சாரத் தேவைகளிற்காக பயன்படுத்தி வந்தது. இந்நிலையில் கிராமப்புறங்களில் மின்சார மய மாக்கல் மிகக் குறைவாக இருந்ததால் தொலைதூர கிராமங்களுக்கு மின்சாரத்தை எடுத்துச் செல்லும் பாரம்பரிய முறைகள் சிக்கலானதாகவும், செலவு கூடியதாகவும் இருந்ததால், சூரிய சக்தி போன்ற மாற்றுச் சக்திகளை அரசாங்கம் ஆராய ஆரம்பித்தது. 1990களின் தொடக்கத்தில் சூரிய வீட்டு தொகுதி (Solar Home Systems) போன்ற சிறிய அளவிலான சோதனைத் திட்டங்கள் தொடங்கப்பட்டன. இந்தத் திட்டங்களின் முக்கிய நோக்கம், மின் இணைப்பு இல்லாத கிராமப்புறக் குடும்பங்களுக்கு அடிப்படை மின்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகும். மின்விளக்குகள் மற்றும் சிறிய மின் விசிறிகள் போன்றவற்றை இயக்க இவை உதவியாக இருந்தன.

1997 ஆம் ஆண்டு உலக வங்கியின் சக்தி சேவைகள் வழங்கல் (Energy Services Delivery) திட்டம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் கிராமப்புற சூரிய மின் திட்டங்களுக்கு நிதி உதவி அளித்து, இலங்கையில் சூரிய சக்தியின் வளர்ச்சிக்கு வலுவான அடித்தளத்தை அமைத்தது. 2000 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் இலங்கையில் சூரிய வீட்டு தொகுதிகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்தது. ஏறத்தாழ 30 000 சூரிய வீட்டு தொகுதிகள் நிறுவப்பட்டன. இது ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு மின்சாரத்தை வழங்கியது.

2010 ஆம் ஆண்டானது இலங்கையில் சூரிய சக்தி துறையில் முக்கியமான காலமாக அமைந்தது. மின்சாரத் தேவைகள் அதிகரித்து, நீர்மின் சக்தியின் எல்லைகள் தெளிவாகத் தெரிய வந்ததால், குறிப்பாக சூரிய ஒளி மின்னியல் தொழில்நுட்பத்தை தேசிய மின்வலையமைப்பில் இணைப்பதற்காக அரசு தீவிர முயற்சிகளை மேற்கொள்ளத் தொடங்கியது. 2016ஆம் ஆண்டில், சூரிய சக்தி சமர் (Battle for solar energy) எனும் முக்கிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இது சூரிய சக்தி உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய மேற்கொள்ளப்பட்ட ஒரு முக்கிய திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் நாடு முழுவதும் கூரைகளில் சூரிய சக்தி தொகுதிகளை நிறுவுவதற்கான முயற்சி தொடங்கப்பட்டது. மேலும் 2020 ஆம் ஆண்டுக்குள் 200 MW சூரிய மின்சக்தியை உருவாக்கும் இலக்கும் நிர்ணயிக்கப்பட்டது.




இத்திட்டத்தில் சூரிய சக்தி தொகுதிகளை நிறுவுவதற்கு நிதி உதவித் திட்டங்கள் வழங்கப்படுகிறது. இது மின்சாரத்தில் தன்னிறைவை அதிகரித்து எரிபொருட்கள் மீதான சார்பு நிலையை குறைக்கவும் உதவுகின்றது.

சூரிய சக்தி சமர் திட்டம் நிகரமானி (Net metering), நிகரகணக்கியல் (Net Accounting) மற்றும் நிகர கூட்டல் (Net Plus) ஆகிய விருப்பங்களை நுகர்வோருக்கு வழங்கி வருகின்றது. இது அவர்கள் தங்களது சொந்தப் பயன்பாட்டிற்காக மின்சாரத்தை உருவாக்கி அதிகபடியான மின்சாரத்தை மின்வலையமைப்புக்கு திருப்பி அனுப்பவும் முடிகிறது.

இந்தத் திட்டத்தின் மூலமாக, குறிப்பாக வீடுகள் மற்றும் வணிக நிறுவனாங்களில், சூரிய மின்சக்தி பயன்பாட்டை அதிகரிக்க செய்துள்ளது. 2020ஆம் ஆண்டுகளில் இருந்து புதுப்பிக்கத்தக்க சக்தி உலகளாவிய ரீதியில் அதிகமான முன்னேற்றம் அடைந்து வருகின்ற நிலையில் இலங்கையிலும் மின்சாரத்துக்கான நிலைத்தன்மை பற்றிய சிக்கல்களை தீர்ப்பதற்கும் சூரிய சக்தி தொகுதிகள் நிறுவல்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. இலங்கையில் நீர் மின்உற்பத்தி மின்சாரத்தின் முக்கிய பகுதியாக இருப்பினும் இது பருவகால சார்புடையதாக இருப்பதால் சூரிய சக்தி போன்ற மாற்று நிலையான சக்தி மூலங்களை உள்வாங்க வேண்டிய தேவை இருக்கின்றது.

2030 ஆம் ஆண்டுக்குள் 70% புதுப்பிக்கத்தக்க சக்தியை அடைவதே அரசின் இலக்காக இருப்பதால் சூரிய சக்தியானது இலங்கையில் சக்தி மாற்றத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றது. அம்பாந்தோட்டை, வவுனியா, பொலநறுவை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் பெரிய அளவான சூரிய மின் பூங்காக்கள் தொடங்கப்பட்டுள்ளன.

சூரிய சக்தி சமர் திட்டம் மற்றும் சூரிய மின் பூங்காக்களின் ஊடாக மொத்த சூரிய சக்தி உற்பத்தி திறன் 2023 ஆம் ஆண்டில் அண்ணளவாக 1000 MW ஆக தொடர்ச்சியான வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இலங்கை மின்சார சபை தரவுகளின்படி இன்றைய காலகட்டத்தில் மொத்த மின்சார தேவைகளில் 6% அதிகமான பகுதியை சூரிய மின்சக்தியின் மூலம் பெறக்கூடியதாக உள்ளது.

இலங்கையில் சூரிய சக்தியின் பயன்பாடு வளர்ச்சி அடைந்திருந்தாலும் சூரிய சக்தி திறனை முழுமையாகப் பயன்படுத் துவதில் பல தடைகளை எதிர்கொள் கிறது .

சர்வதேச அளவில் சூரியப் படலைகளின் விலைகள் குறைந்துள்ள போதிலும் இலங்கையில் நிறுவுவதற் கான ஆரம்ப முதலீடு குறிப்பாக கிரா மப்புறம் மற்றும் சிறிய வணிக உரிமையாளர்க ளுக்குப் பெரும் தடையாக உள்ளது. கடன் மற்றும் வாடகைத் திட்டங்கள் போன்ற நிதி உதவிகள் இன்னும் எல்லா மக்களுக்கும் இலகுவாகக் கிடைக்க கூடிய அளவில் இல்லை. சூரிய சக்தி சமர் போன்ற திட்டங்கள் சூரிய சக்தியைப் பயன்படுத்துவதில் வெற்றி கண்டுள்ள போதிலும், குறிப்பாக கிராமப்புறங்களைச் சென்றடைவதற்கு நிலையான மற்றும் அதிகமான நிதியில் ஊக்கத் தொகைகள் தேவைப்படுகின்றது.

இலங்கையில் சூரிய சக்தித் துறையில் அடுத்த பெரிய பிரச்சினையாக உள்ளது செயற்றிறன் மிக்க சேமிப்பு தொகுதிகளின் பற்றாக்குறையாகும். சூரிய சக்தி தொடர்ச்சியாக கிடைக்க கூடியது அல்ல. அது சூரிய ஒளி கிடைக்கும் தன்மையைச் சார்ந்தது. மாலை நேரங்களில் மின்சாரமானது அதிகமாக தேவைப்படுவதால் சூரிய சக்தியை சேமித்து வைப்பதற்கான சக்தி சேமிப்புத் தொகுதிகள் அவசியமானதாகும்.

சூரிய சக்தியை பயன்படுத்துவதனால் அதிகளவிலான நன்மைகள் இருந்த போதிலும் இலங்கையில் பெரும்பாலான மக்களிடையில் இன்னும் பரவலாக பொதுவிழிப்புணர்வு இல்லாமல் காணப்படுகின்றது. தவறான தகவல்கள் மற்றும் சூரிய சக்தியின் நம்பகத்தன்மை, செலவு குறைப்பு குறித்த சந்தேகங்கள் அதிகளவிலான மக்களைச் சூரிய சக்தி சென்றடைவதில் தடையாக காணப்படுகின்றது.

ஆகவே சூரிய சக்தி பயன்பாட்டினால் ஏற்படும் பொருளாதார மற்றும் சுற்றுச் சூழல் நன்மைகள் தொடர்பாகக் கல்வி பிரச்சாரங்கள் மற்றும் விழிப்புணர்வுத் திட்டங்கள் மிகவும் அவசியமானதாக இருக்கின் றது. மேலும் எளிமையாக சூரிய சக்தித் தொகுதிகளை நிறுவும் செயல் முறைகள் மலிவான நிதி உதவி திட்டங்கள் மற்றும் அரசாங்க ஊக்க தொகைகள் மூலம் சூரிய சக்தியை மிகவும் எளிதாக மக்கள் அணுகக்கூடியதாக மாற்றுவது நாடு முழுவதும் சூரிய சக்தியை ஏற்றுக் கொள்ளும் விகிதத்தை அதிகரிக்க முடியும்.

இலங்கையில் சூரிய சக்தி பயன்படுத்துவதில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி நாட்டின் எதிர்காலத்துக்கான பிரகாசமான வழியைச் சுட்டிக்காட்டுகின்றது. அரசு, தனியார்துறை மற்றும் பொது மக்கள் அனைவரும் இணைந்து செயற்பட்டு இலங்கையை ஒரு பசுமை மற்றும் நிலையான எதிர்காலத்தை நோக்கி நகர்த்துவதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

கலாநிதி.
அமல்ராஜ் பீற்றர் அமலதாஸ்,
சிரேஷ்ட விரிவுரையாளர் ,
பௌதிகவியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு மருத்துவமனையில் இடவசதியின்மையால் நோயாளர்கள் அவதி



(கண்டாவளை)

**போருக்கு முன்னர் 110 மில்லியன் ரூபாய் நிதியில் கட்டப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை நோயாளர்கள் தங்கி இருந்து சிகிச்சை பெற்றுக் கொள் வதற்கான மருத்துவ விடுதிகள் தற்காலிகமாகவே கட்டப்பட்ட நிலையில் இதுவரை மாற்று வழி எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. இதனால் பல கிலோ மீற்றர் தூரத்தில் இருந்து வரும் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.**

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் நோயாளர்களுக்கான சரியான இட வசதி இல்லாத நிலையினால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஆண்களுக்கு ஒரு விடுதியும் பெண்களுக்கு ஒரு விடுதியும்காணப்படுகின்றது. இரண்டு விடுதிகளிலும் சுமார் 60 பேர் வரையிலேயே தங்கி நின்று சிசிக்சை பெற் றுக்கொள்ளக் கூடிய நிலையே காணப்படுகின்றது.

இந்த நிலையில் மருத்துவமனைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுவதால் மருத்துவ விடுதிகளில் போதிய இடவசதி இல்லாத நிலையினால் நிலத்திலும் கட்டடங்களின் ஓரங்களிலும் நோயாளர்கள் படுத்து உறங்கும் நிலையினைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இந்த இரண்டு மருத்துவ விடுதிகளும் தற்காலிக மருத்துவ விடுதிகளாகவே கட்டப்பட்டுள்ள நிலையில் அதில் போதியளவு வசதிகள் இல்லாத நிலையே காணப்படுகின்றது.

எனவே முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் மருத்துவ விடுதி தொடர்பில் வடமாகாண ஆளுநர் கவனத்தில் எடுத்து இனிவரும் காலங்களில் நிரந்தர மருத்துவ விடுதிகள் அமைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பது நோயாளர்களின் எதிர்பார்ப்பும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் எதிர்பார்ப்புமாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-315)

## வவுனியாவில்
# தேக்கு மரக்குற்றிகளை ஏற்றிச் சென்றவர் கைது



(வவுனியா)

வவுனியா நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் அனுமதிப்பத்திரமின்றி 72 தேக்கு மரக்குற்றிகளை ஏற்றிச்சென்ற வாகனத்துடன் நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நெளுக்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.எம்.பி.ஆர்.கே திவுல்வெவ தலைமையிலான பொலிஸ் குழுவினர் முன்னெடுத்த விசேட நடவடிக்கையின் போது, மரக்காரம்பளை பகுதியில் குறித்த பட்டா ரக வாகனத்தினை மறித்து சோதனைக்குட்படுத்திய சமயத்தில் 72 தேக்கு மரக்குற்றிகளை அனுமதிப்பத்திரம் இன்றி ஏற்றிச்சென்ற குற்றச்சாட்டில் பட்டா ரக வாகனத்தினை பொலிஸார் கைப்பற்றியதுடன் சாரதியினையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் குறித்த பட்டா ரக வாகனம் மற்றும் 72 தேக்கு மரக்குற்றிகள் என்பவற்றுடன் கைது செய்யப்பட்ட வாகனத்தின் சாரதியையும் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (8-250)

## எதிர்வரும் 15 ஆம் திகதி முதல்
# யாழ்.மத்திய பேருந்து நிலையத்திலிருந்து 809 வழித்தடப்பேருந்து சேவையில்

(தருமபுரம்)

கிளிநொச்சி இலங்கை போக்குவரத்துச்சபை சாலைக்கு சொந்தமான 809வழித்தடப் பேருந்து எதிர்வரும் 15ஆம் திகதி முதல் மூளாயிலிருந்து சேவையில் ஈடுபடாது என இலங்கை போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி சாலை முகாமையாளர் சிவபாத சுந்தரம் ஜீவானந்தன் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே குறித்த விடயத்தை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், மூளாயிலிருந்து அதிகாலை 5.30மணிக்கு மருதனார் மடம், உரும்பிராய், கோப்பாய், கைதடி, சாவகச்சேரி, தனங்கிழப்பு, பூநகரி, முட்கொம்பன், பரந்தன், கிளிநொச்சி வரை சேவையில் ஈடுபட்ட குறித்த பேருந்து எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் காலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு கைதடி, சாவகச்சேரி, தனங்கிழப்பு, பூநகரி, முட்கொம்பன், அக்கராயன், முறிகண்டி ஊடாக கிளிநொச்சி பேருந்து நிலையத்தை அடையவுள்ளதாகவும் தெரிவித்தார். மீண்டும் 12.40 இற்கு கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டு குறித்த பகுதியூடாக யாழ்ப்பாணத்தைச் சென்றடையவுள்ளதாகத் தெரிவித்தார். (8-316)

# கழிவுகள் நிறைந்த குளத்தில் மரக்கறிகளை சுத்தம் செய்கின்றனர்
## நுகர்வோர் குற்றச்சாட்டு

(வவுனியா)

வவுனியா, இலுப்பையடி பகுதியில் உள்ள மொத்த மரக்கறி விற்பனை நிலையங்களுக்கு வரும் சில மரக்கறிகள் கழிவுகள் நிறைந்த வவுனியா குளத்தில் சுத்தம் செய்த பின் விற்பனை செய்யப்பட்டு வருவதாக நுகர்வோர் குற்றம்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் கடந்த சில மாதங்களுக்கு முன் சுகாதார பரிசோதகர்களுக்கு அறிவிக்கப்பட்ட போது அவர்கள் சம்பவ இடத்திற்கு வருகை தந்து வர்த்தகர் ஒருவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்த போதும், தற்போதும் சில வியாபாரிகள் குறித்த குளத்திலேயே மரக்கறிகளைச் சுத்தம் செய்து விற்பனை செய்து வருகின்றனர்.

மேலும் வவுனியா குளமானது நகரில் அமைந்துள்ளதால் பல வர்த்தக நிலையங்களின் கழிவுகள் மற்றும் குப்பை கூழங்கள் என்பன அதில் வீசப்பட்டு வருகின்றது. இந்நிலையில் குறித்த நீரில் மரக்கறிகளைச் சுத்தம் செய்து விற்பனை செய்வது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என மரக்கறி கொள்வனவு செய்யும் நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-250)

## வாழ்வாதாரத்திற்காக வழங்கப்பட்ட
# கால்நடைகள் திருட்டு

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் வாழ்வாதாரத்துக்காக வழங்கப்படும் கால்நடைகள் நாளாந்தம் களவாடப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்தில் உள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் விசேட தரத்திற்குட்பட்ட குடும்பங்கள் அன்றாட வாழ்வாதாரத்துக்காக வளர்த்து வருகின்ற கால்நடைகளே இவ்வாறு களவாடப்படுகின்றன.

குறிப்பாக வீடுகளிலே கட்டி பராமரிக்கப்படும் கால்நடைகள் இரவு வேளைகளில் திருடப்பட்டு வருகின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை கண்டாவளைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கட்டி வைக்கப்பட்டிருந்த மூன்று கால்நடைகள் ஒரே நேரத்தில் களவாடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் கால்நடை உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே குறித்த பிரதேசங்களில் இரவு வேளைகளில் பொலிஸ் சுற்றுக்காவல் நடவடிக்கைகளை ஏற்படுத்தித் தருமாறு பாதிக்கப்பட்ட தரப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (8-316)

# புளிக்கு தட்டுப்பாடு



(தருமபுரம்)

நாட்டில் புளிக்கு தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 1 கிலோ புளி 2000 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் குற்றம் சாட்டியுள்ளனர். (நி-8-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோஹிங்யா அகதிகளை நாடு கடத்த வேண்டாம் முல்லையில் கவனயீர்ப்புப் போராட்டம்!

(வவுனியா)

முல்லைத்தீவுக் கடலில் தஞ்சம் அடைந்த ரோஹிங்யா அகதிகளை நாடுகடத்தவேண்டாம் என்பதை வலியுறுத்தியும் இலங்கை சர்வதேச மனித உரிமைச் சட்டங்களைப் பாதுகாக்கக்கோரியும்வடக்கு- கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப் பட்டுள்ளது.




வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவினரால் பெண்கள் குழுக்களின் பிரதிநிதிகள், மனிதஉரிமை பாதுகாவலர்கள் கடற்றொழிலாளர் சங்க உறுப்பினர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுடன் கையில் பதாதைகளைத் தாங்கியவாறு அமைதியான முறையில் கவனயீர்ப்பினை வெளிப்படுத்தினார்.

அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாப்பிலவு விமானப் படைத்தளத்தில் இரண்டு வாரங்களுக்கு மேலாக அந்த மாவட்டத்தின் சிவில் நிர்வாக கண்காணிப்பு இன்றி இராணுவ மயமாக்கல் சூழலுக்குள் அகதிகளைத் தங்கவைப்பது சர்வதேச மனிதாபிமான நியமங்களுக்கும் அடிப்படை மனிதாபிமான விழுமியங்களுக்கும் மாறானதாகும்.

எனவே இந்த அகதிகளை மீரியானவில் உள்ள அகதிகள் மையத்திற்கு அல்லது வேறொரு பொருத்தமான இடத்திற்கு மாற்றுவதுடன் அப்பிரதேச சிவில் நிர்வாக கண்காணிப்புக்குள் அவர்களைக் கொண்டு வரவேண்டும் எனத் தெரிவித்ததுடன் கவனயீர்ப்பினையும் அறிக்கையினையும் குரல்பதிவினையும் மேற் கொண்டபின்னர் அவர்களின் அறிக்கைகளை பிரதமர், வெளிவிவகார அமைச்சர், ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (8-299)

# முல்லையில் துப்பாக்கிச்சூடு ஒருவர் படுகாயம்

(வவுனியா)

முல்லைத்தீவு கூழா முறிப்புப் பகுதியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து மாஞ்சோலை வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக் கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்குட்பட்ட கூழாமுறிப்பு பகுதியில் சகோதரியின் கணவருக்கும் மைத்துனருக்கும் இடையில் ஏற்பட்ட மனக்கசப்பு கைகலப்பாக மாறியுள்ளது. அதனையடுத்து கோபமடைந்த மைத்துனர் சகோதரியின் கணவரை கத்தியால் வெட்டியுள்ளார். அது பலனளிக்காத நிலையில் காட்டுக்குள் சென்று இரு இடியன் துப்பாக்கிகளை எடுத்து வந்து தனது சகோதரியின் கணவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார். இதன்போது படுகாயமடைந்த குறித்த நபர் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த சம்பவத்தில் ஒட்டுசுட்டான் கூழாமுறிப்பினை சேர்ந்த 46 வயதுடைய குடும்பஸ்தரே படுகாயமடைந்துள்ளதுடன் துப்பாக்கிச் சூடு நடத்திய 24 வயதுடைய சந்தேக நபரே தலைமறைவாகியுள்ளார்.

மேலும் சம்பவத்தை நடத்திய சந்தேகநபரைக் கைது செய்யும் நடவடிக்கையில் ஒட்டுசுட்டான் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (8-299)

## ஒட்டுசுட்டான்
# பிரதேச செயலகத்துக்கு புதிய செயலாளர் நியமனம்



(முறிகண்டி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்குப் புதிய பிரதேச செயலாளராக ரட்ணகுமார் நிசாந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரைச் சந்தித்து நியமனப் பொறுப்புக்களை ஏற்றதுடன் பிரதேச செயலகத்தில் தனது கடமைகளை நேற்றைய தினம் பொறுப்பேற்றார்.

யாழ்ப்பாணம் கமநல சேவைகள் திணைக்களத்தில் பிரதி ஆணையாளராகவும் ஜனாதிபதி செயலகத்தில் உகை உணவுத்திட்ட பணிப்பாளராகவும் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-100)

# ஊழல் மோசடிகளிலிருந்து விரைவில் நாட்டை விடுவிப்போம்
## வாக்குறுதியை நிறைவேற்றுவோம் - விஜயபால

(கொழும்பு)

ஒன்றரை மாதங்கள் விடா முயற்சியுடன் செயற்பட்டால் ஊழல், மோசடி, இலஞ்சம், நிதி மோசடி தொடர்பான விசாரணைகளில் நாடு எதிர்பார்த்த பலனைப் பெறமுடியும் என்று பொதுப் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். ஊழல், மோசடி, இலஞ்சம் மற்றும் நிதி மோசடி தொடர்பான எந்தவொரு விசாரணைகளையும்அரசு நிறுத்தவில்லை.

அந்த விசாரணைகள் எதுவும் அரசியலாக்கப்படவில்லை என்று தெரிவித்த அவர், தமது அரசு பொலிஸாரைச் சிபாரிசு செய்ய வைத்துள்ளதாகவும் இரகசியப் பொலிஸாருக்கு விரிவான அதிகாரங்களை வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அவை அனைத்தையும் சுயாதீனமாக ஆராய்ந்து வருவதாகத் தெரிவித்த அமைச்சர், ஊழல், மோசடி, இலஞ்சத்துக்கு எதிராக நிச்சயமாக நடவடிக்கை எடுப்போம் என்பது நாட்டு மக்களுடன் அரசு செய்துள்ள உடன்பாடு என்றும் சுட்டிக்காட்டினார். (நி)

# வடக்கிற்கான புகையிரத சேவை விரிவுபடுத்தப்பட வேண்டும்
## கஜேந்திரகுமார் எம்.பி. வலியுறுத்து

(கொழும்பு)

வடக்கு மாகாணத்துக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள புகையிரத சேவையை விரிவுபடுத்த போக்குவரத்து அமைச்சு விசேட கவனம் செலுத்த வேண்டும். தமிழர்கள் அதிகமாக வசிக்கும் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி புகையிரத நிலையங்களில் வடக்கு மாகாணத்துக்கான புகையிரதங்களை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தினார். பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்திய நிதித்திட்டத்தின் கீழ் வடக்கு புகையிரதப்பாதை புனரமைக்கப்படுகிறது.

தினசரி கொழும்பு - யாழ். இடையே நான்கு புகையிரத சேவைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் அநுராதபுரம் முதல் வவுனியா வரையிலான புகையிரத பாதை புனரமைப்புப் பணி காரணமாக அந்த புகையிரத சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

அந்த நான்கு சேவைகளில் இரண்டு சேவைகள் கிழக்கு மாகாணத்திற்கு முன்னெடுக்கப்பட்ட போதும் யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் கொண்டு வரப்படவில்லை.

தற்போது யாழ்ப்பாணத்திற்கு ஒரு புகையிரத சேவையே உள்ளது. அத்துடன் அதிவேக புகையிரத சேவை சனி மற்றும் ஞாயிறு தினங்களில் முன்னெடுக்கப்படுகிறது.

இது எமக்கு போதுமானது அல்ல. நான்கு சேவைகளை மேற்கொள்ள வேண்டிய நிலையில் இரண்டு சேவைகளே தற்போது முன்னெடுக்கப்படுகிறது. இந்த விடயம் தொடர்பில் புகையிரத திணைக்களமும் போக்குவரத்து அமைச்சும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை யாழ்ப்பாண புகையிரத சேவை கொழும்பு வரையிலேயே முன்னெடுக்கப்படுகிறது. கல்கிசை வரையில் நடத்தப்பட வேண்டும் என்பதுடன் தமிழர்கள் அதிகமாக வசிக்கும் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி ரயில் நிலையங்களில் நிறுத்தக் கூடியவாறும் சேவைகள் நடத்தப்பட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டு நிற்கின்றேன் என அவர் தெரிவித்தார். (நி)

# 2026ஆம் ஆண்டிலிருந்து பரீட்சைகள் வழமைக்கு
## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 2026ஆம் ஆண்டிலிருந்து இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் ஊடாக நடத்தப்படும் பரீட்சைகளுக்கான திட்டமிடல் முன்பு இடம்பெற்றது போன்று வழமையான முறையில் நடத்த முடியும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயத்தினை பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமர்விலேயே அவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி லக்மாலி ஹேமச்சந்திர பிரதமரிடம் முன்வைத்த வாய்மொழி மூலமான கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



அதன்படி 2026 ஆம் ஆண்டில் இருந்து சாதாரண முறைப்படி பரீட்சைகளை நடத்த முடியும் என்றும் கொரோனாத் தொற்று ஆரம்பிப்பதற்கு முன்னர் இடம்பெற்றவாறு பரீட்சைகள் உரிய கால அட்டவணையில் நடத்தப்பட முடியும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முடன் வாழ்வோரைப் புரிந்து கொள்வதற்கு நம்மை நாமே முதற்கண் புரிந்து கொள்வது அவசியம்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எந்த நாடும் எங்களுக்காக அழுத்தம் கொடுக்காது

உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு என்ற கருத்தின் பொருளை உணர்ந்து கொள்வது அவசியம்.

ஆக, உலக நாடுகள் இலங்கை அரசாங்கத்தின் பக்கமாகவே எப்போதும் நின்றுள்ளன. இதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை.

ஆம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரைச் சந்தித்து, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்குமாறு கேட்டுள்ளனர்.

இவ்வாறு தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்பது ஒரு சம்பிரதாயமானது மட்டுமே.

இவ்வாறு கேட்பதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுகின்ற விடயத்தில் அமெரிக்கா அழுத்தம் கொடுக்காது என்ற உண்மை சந்தித்த நம்மவர்களுக்கும் நன்கு தெரியும்.

அப்படியானால் ஏன் அவர்கள் அமெரிக்கத் தூதுவரைச் சந்தித்து அவ்வாறானதொரு கோரிக்கையை முன்வைத்தனர் எனில், தங்களைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பிய தமிழ் மக்களுக்குத் தாங்களும் சும்மா இருக்கவில்லை என்பதைக் காட்ட வேண்டுமல்லவா, அதற்காகவே அந்தச் சந்திப்பும் கோரிக்கையும் என்பது புரிதற்குரியது.

உண்மையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுகின்ற நினைப்பு நம்மவர்களிடம் இருந்திருக்குமாயின், 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிந்த கையோடு எங்களுக்கு ஏற்பட்ட இழப்பை முன்வைத்து இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டியிருக்க வேண்டும்.

ஆனால் அதை இரா.சம்பந்தர் செய்யவே இல்லை. சம்பந்தர் செய்யவில்லை என்பதை அப்போது அவரோடு இருந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் வாய்திறந்து சொல்லவில்லை.

எங்களின் தமிழ்த் தலைவர் இரா.சம்பந்தரென்று உச்சாடணம் செய்தால்தான், அடுத்த முறையும் தேர்தலில் போட்டியிடுவதற்கான ஆசனத்தை சம்பந்தர் தருவார் என்ற ஒரே காரணத்துக்காக, எங்கள் தமிழ் இனத்துக்குச் சம்பந்தர் செய்த அத்தனை துரோகத்தையும் பார்த்துக் கொண்டிருந்தவர்களால் இப்போது மட்டும் நேர்மையாகச் செயற்பட முடியுமா? என்பதைத் தமிழ் மக்களே முடிவு செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்ல, இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்துப் பேச இந்தியாவுக்கு வாருங்கள் எனத் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களை பிரதமர் நரேந்திர மோடி அழைத்திருந்தார். ஆனால் அவர்கள் பிரதமர் மோடியின் அழைப்பை கிஞ்சித்தும் பொருட்படுத்தவில்லை எனில், அதற்குள் எத்தனை விடயங்கள் இருக்கும் என்பதை நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவையில்லை.

ஆக, தங்களுக்குள் ஒற்றுமைப்பட முடியாத இவர்கள் கேட்டு எதுவும் நடக்கப் போவதுமில்லை. உலக நாடுகள் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கப் போவதுமில்லை.

மாறாக, தமிழ் மக்கள் சேர்ந்து அரசியல் வியூகம் அமைத்தால் மட்டுமே ஏதேனும் சாத்தியமாகும்.

# இலங்கையில் சீன வைரஸ் தாக்கம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை

## போலிச் செய்திகளை வெளியிட வேண்டாம் – ஊடகங்களுக்கு சுகாதார அமைச்சு அறிவுரை

இலங்கையில் இதுவரை எந்தவொரு சீன வைரஸினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளும் அடையாளம் காணப்படவில்லை. இது குறித்து அரசாங்கம் விழிப்புடன் செயற்படுகின்றது. எனவே ஊடகங்கள் அரசாங்கத்தினால் உறுதிப்படுத்தப்படாத தகவல்களை வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும் எனச் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்றுப் பாராளுமன்றில் தெரிவித்தார்.

இலங்கையில் சீன வைரஸால் பாதிக்கப்பட்ட நோயாளி ஒருவர் அடையாளம் காணப்பட்டமை தொடர்பில் பாராளுமன்றில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், இதுவரைக்கும் HMPV தொற்று பதிவுகள் எதுவும் அடையாளம் காணப்படவில்லை. ஒரு நோயாளர் மீது சந்தேகம் நிலவிய நிலையில், அது குறித்த பரிசோதனைகளில் தொற்று உறுதியாகவில்லை.

இந்நிலையில் இலங்கையில் சீன நோய் தொற்றாளர் இனங்காணப்பட்டதாக வர்ணித்து உண்மைக்குப் புறம்பான செய்திகளை சமூக ஊடகங்கள் மற்றும் செய்திச் சேவைகள் பிரசுரித்திருந்தன.

இவ்வாறான கீழ்த்தரமான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம்என ஊடகங்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன் என்றார். (ம-7)

# அநுர அரசு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் யதார்த்தமற்றவை

## சபையில் போட்டுடைத்தார் திலீத் ஜயவீர

(கொழும்பு)

தேசிய மக்கள் அரசாங்கத்தினால்பொது மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட முடியாதவை எனப் பாராளுமன்ற உறுப்பினர் திலீத் ஜயவீர தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலத்தில் தேசிய மக்கள் சக்தி அரசியல் மேடைகளில் அளித்த வாக்குறுதிகள் வெறும் அரசியல் நோக்கத்திலானது எவ்வாறெனினும் இந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படக் கூடியவை அல்ல என்பது தெளிவாகத் தெரிகின்றது.

நடைமுறைச் சாத்தியமற்ற வாக்குறுதிகளை இந்த அரசாங்கம் மக்களுக்கு வழங்கி வருகிறது. வருமானம் இன்றி செலவு செய்ய முடியாது என்ற அடிப்படைக் கணக்கீட்டுக் கொள்கையைப் புரிந்து கொள்ளாது வாக்குறுதிகள் மாத்திரம் அளிக்கப்படுகிறது.

நாட்டுமக்களைத்தொடர்ந்தும் எதிர்பார்ப்புக்குள் மூழ்கச் செய்து அவற்றிலேயே அவர்களை வாழச் செய்வது பிழையானது. அரசாங்கம் மக்களுக்கு உண்மையைச் சொல்ல வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் இந்த அரசாங்கத்திற்கு எந்த விதமான கொள்கைத் திட்டமும் கிடையாது எனக் குற்றம் சுமத்திய அவர், தாம் இந்தப் பாராளுமன்றத்திற்கு வந்தது பாராளுமன்ற சிற்றுண்டிச்சாலையில் சாப்பிட்டுச் செல்வதற்கு அல்ல எனவும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## உள்ளூராட்சித் தேர்தல்

# திருத்தச் சட்டமூலம் நேற்று பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற அதிகாரசபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) தொடர்பான சட்டமூலத்தைப் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் சந்திம அபேரத்ன, முதலாம் வாசிப்புக்காகப் பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை சமர்ப்பித்தார்.

பாராளுமன்றச் செயலாளர் நாயகம் சட்டத்தரணி குஷானி ரோஹணதீர இந்தச் சட்டவரைவின் நோக்கத்தை வருமாறு சபைக்கு வாசித்தார்.

குறித்த சில உள்ளூர் அதிகார சபைகளின் தேர்தல்கள் கோரப்பட்டு பிற்போடப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய உள்ளூர் அதிகாரசபைகள் தொடர்பில் புதிய நியமனப்பத்திரங்களைக் கோருவதற்காகவும், தேர்தல்களை நடாத்துவதற்காகவும் ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்காக உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்ட மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்பை 2023 .03.09 ஆம் திகதி நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்த நிலையில் நிதி நெருக்கடி காரணமாக காலவரையறையின்றி பிற்போடப்பட்டது. இவ்வாறான நிலையில் உளளூராட்சிமன்றத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளதால் நாட்டு மக்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்து உடனடியாக தேர்தலை நடத்துமாறு தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு அறிவுறுத்தியிருந்தது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்களுக்கு அமைய தேர்தலை நடத்துவது சாத்தியமற்றது. ஆகவே மீண்டும் வேட்புமனுக்களை கோருமாறு அரசியல் கட்சிகள் வலியுறுத்தியதைத் தொடர்ந்து தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆலோசனைக்கு அமையப் புதிதாக வேட்புமனுக்களை கோருவதற்கு அரசாங்கம் தீர்மானித்து, உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளும் வகையில் குறித்த சட்டமூலத்தை முதலாம் வாசிப்புக்கு சமர்ப்பித்துள்ளது என்றார். (ம-7)

# சவேந்திர சில்வாவின் அலுவலகம் மூடப்பட்டது

(கொழும்பு)

பாதுகாப்புப் படைகளின் முன்னாள் பிரதானி சவேந்திர சில்வாவின் அலுவலகம் உத்தியோகபூர்வமாக மூடப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படைகளின் பிரதானியாக இருந்த ஜெனரல் சவேந்திர சில்வா, கடந்த டிசம்பர் 31ம் திகதியுடன் ஓய்வுபெற்றிருந்தார்.

பாதுகாப்புப் படைகளின் பிரதானி பதவியை முற்றாக ஒழிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கும் நிலையில், இதுவரை அப்பதவிக்கு யாரும் நியமிக்கப்படவில்லை.

இந்நிலையில் சவேந்திர சில்வா, பாதுகாப்புப் படைகளின் பிரதானியாக பணியாற்றிய காலத்தில் பயன்படுத்திய அலுவலகம் தற்போது மூடப்பட்டுள்ளது.

அங்கு பணியாற்றிய அலுவலர்கள் மற்றும் சவேந்திர சில்வாவின் பாதுகாப்புக்கு இணைக்கப்பட்டிருந்த ராணுவத்தினர் ஆகியோர் தற்போது அவரவர் பணியாற்றும் சொந்த ராணுவ ரெஜிமண்டுகளுக்கு மீளத்திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். (ம-7)

# தொலைபேசிக் கம்பத்துடன் வான் மோதுண்டு விபத்து

வவுனியா பண்டாரிக்குளப் பகுதியில் தொலைபேசி இணைப்புக் கம்பத்துடன் மோதுண்டு வான் விபத்துக்குள்ளானது.

பண்டாரிக்குளம் பகுதியிலிருந்து புகையிரத நிலைய வீதி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த வான் பண்டாரிக்குளம் அம்மன் கோவிலை அண்மித்தப் பகுதியில் வாகனம் சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து வீதியின் அருகேயிருந்த தொலைபேசி இணைப்புக் கம்பத்துடன் மோதுண்டதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு பிரதேச சபை, புதுக்குடியிருப்பு

## புதுக்குடியிருப்பு கடைகள் மற்றும் திருமுறிகண்டி கடைகளுக்கான நீண்டகால குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல்

புதுக்குடியிருப்பு பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு சொந்தமான கடைகள் மற்றும் திருமுறிகண்டி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கடைகள் என்பன நீண்டகால குத்தகையில் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரங்கள் வழங்கும் காலம் :- 15.01.2025 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 30.01.2025. பிற்பகல் 02.00 மணி வரை (அலுவலக நாட்களில் மட்டும்)**

**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி :- 31.01.2025 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 02.00 மணி வரை**

**கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 31.01.2025 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 02.00 மணி**

**கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- புதுக்குடியிருப்பு பிரதேசசபை, தலைமை அலுவலகம்**

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக்கூடியது) | மாதாந்த வாடகை | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| **புதுக்குடியிருப்பு சந்தைஉள்கடைகள்** | | | | |
| கடை இல 02 | ரூபா. 1,440,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா 6,000.00 | ரூபா. 2,000.00 |
| கடை இல 03 | ரூபா. 1,680,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா 7,000.00 | ரூபா. 2,000.00 |
| **புதுக்குடியிருப்பு நகர்பகுதி கடைகள்** | | | | |
| கடை இல 02 | ரூபா. 3,840,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 16,000.00 | ரூபா. 2,000.00 |
| **திருமுறிகண்டி கடைகள்** | | | | |
| கடை இல 05 | ரூபா. 3,600,000.00 | ரூபா. 10,000.00 | ரூபா. 15,000.00 | ரூபா. 2,000.00 |

**நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருப்பதுடன் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்திய பிரதி அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏதேனும் ஓர் ஆவணத்தின் உறுதிப்படுத்திய பிரதி, தாம் வதியும் கிராம சேவையாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடத்தின் வதிவிட சான்றிதழ் மூலப்பிரதி ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கேள்விப்பத்திரங்களின் இரு பிரதிகளும் **தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, புதுக்குடியிருப்பு பிரதேச சபை, புதுக்குடியிருப்பு.** என முகவரியிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **புதுக்குடியிருப்பு சந்தை உள்கடை இல... புதுக்குடியிருப்பு கடை இல... , திருமுறிகண்டி கடை இல...** என கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் **31.01.2025 ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு முன்** கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரு கேள்விகளும் கேள்வி திறத்தல் நேரத்திற்கு முன்பு கிடைக்கப்பெறல் வேண்டும். கேள்வி நேரத்தின் பின்னர் கிடைக்கும் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் (கறுப்புப்பட்டியல்) கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் மீளளிக்கப்படமாட்டாது.
5. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
6. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தாங்கள் தெரிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் ஒரே தடவையில் கேள்வித் தொகையின் முழுத்தொகையையும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
7. சித்திரக் குத்தகைக்காரர் வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்படும் கடைக்கான மாதாந்த வாடகைவ்யை செலுத்துதல் வேண்டும்.
8. முற்குறிப்பிட்ட நிபந்தனையின் பிரகாரம் நடக்க தவறுமிடத்து வாடகை ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்புச் செய்யப்படாது என்பதுடன், அவர்களது பெயர் தவறுனர் பட்டியலில் அட்டவணைப் படுத்தப்படும்.
9. சபையின் அனுமதியின்றி எதுவித திருத்த வேலைகள், மாற்றங்கள், புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.
10. தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
11. பிரதேசசபை சட்டங்களுக்கு அமைவாக ஒப்பந்தம் தொடர்பாக செயலாளரினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கு தாங்கள் கட்டுப்பட வேண்டும்.
12. கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் நேரடியாக அல்லது தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்தியபெறுகைக் குழு,**
**புதுக்குடியிருப்பு பிரதேச சபை,**
**புதுக்குடியிருப்பு.**
**2025.01.10**

**தொலைபேசி இல:-021 229 1023**
**email-pkipsmullai@gmail.com**

(C-1990)

---

## வவு.பூவரசன்குளம் பகுதியில்

# சட்டவிரோதமான முறையில் வெட்டப்படும் காட்டு மரங்கள்

## மக்கள் விசனம்

(கண்டாவளை)

வவுனியா பூவரசன் குளம் பகுதியில் தொடர்ந்தும் காடுகளில் சட்டவிரோத மான முறையில் பெறுமதி வாய்ந்த மரங்கள் பகல் வேளைகளில் வெட்டப்பட்டு கனரக வாகனங்களில் வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தின் பூவரசன் குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காட்டு பகுதி மற்றும் பம்பை மடு கோயில் மோட்டை ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியாக சட்டவிரோதமான முறையில் காடுகளுக்குள் தினமும் பெறுமதி வாய்ந்த மரங்கள் வெட் டப்பட்டு பலகைகளாகவும் தீராந்திக ளாகவும் செய்யப்பட்டு ஏற்றி செல்லப் படுகின்றன எனவும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

எனவே குறித்த பிரதேசத்தில் இருந்து சட்ட விரோதமாக கொண்டு செல்லப்படும் காட்டு மரங்கள் தொடர் பாக உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-315)

---

# யா/ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி புத்தூர்

**தரம் 06 மற்றும் தரம் 10**

**மாணவர் அனுமதி - 2025**

யா/ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியின் 2025 ஆம் ஆண்டிற்கான தரம் 06 மற்றும் தரம் 10 இற்கு (தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம்) மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இவ் விண்ணப்பப் படிவத்தினை 10.01.2025 இன்று (வெள்ளிக்கிழமை) முதல் பாடசாலை நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி : 20.01.2025

**அதிபர்**
**(0776142597)**

(சி-1988)

---

# வலயத்திற்காய் உழைத்த வலம்புரிச்சங்கு! வளமுடன் வாழ உளமார வாழ்த்துகிறோம்

மணிவிழா நாயகி
## திருமதி. மேரி றீற்றா தெட்சணாமூர்த்தி
(ஆசிரிய ஆலோசகர் - கத்தோலிக்கம்)
**அவர்களது நற்சேவையை இயம்பும் பாராட்டுப்பாமாலை**



முல்லைக் கல்வி வலயத்தின்
மிருதுவான ஆசிரிய ஆலோசகர்
எம் றீற்றா எல்லையில்லாச்
சேவை செய்து ஏற்றம் பல கண்ட
அம்மணியை சொல்லவல்ல
சுடர்மதியை யாருடனும்
பகை கொள்ளாத பூமகளை
முல்லைப்பூ நாமெடுத்து முத்தாரமாய்ச்
சொரிந்து வாழ்த்துகின்றோம்

கல்லையும் கனியவைக்கும்
சொல்லாடும் திறன்மிக்காள்
முல்லையில் நிதம் வந்தாடும்
தொல்லையில்லாத் தோகைமயில் இவள்
ஓட்டமும் நடையுமாய்
ஒய்யாரமாய்ப் பணிபுரிந்த - எங்கள்
ஓங்கார நாயகியை
அகமகிழ வாழ்த்துகின்றோம்

சுட்டிக்கு சுட்டியாய்
முறையான கலைத்திட்டத்தைச்
சுமந்து சுடச்சுட குறி வைத்துச் சுட்ட
சுடர்மணியே வாழ்க!
எட்டுமறிந்த கட்டில்லா
அரியாத்தை எம் றீற்றா மட்டில்லா
மகிழ்வுடன் மாண்போடு
பல்லாண்டு வாழ்வீர்காண்

ஆடிக்கூழென்ன சரஸ்வதி
பூசையென்ன பொங்கலென்ன
ஒளிவிழாவின் மூலமூர்த்தியே
வலய நிகழ்வுகளின் தலைவியே நிறைப்பட்டாய்
நீயிருந்து கூசாது
நெறிப்படுத்திய பெருமாட்டியே
குறைவற்ற நிறைவான வாழ்வுக்கு
என்றும் இறையாசி உண்டு

கல்விக்குச் செய்த சேவை
காலத்தால் என்றும்
அழியாது வல்ல எதிர்காலம்
வளங்களுடன் வீட்டைநிறைக்கும் - என்றும்
நல்ல தெட்சணாமூர்த்தி
பிள்ளைகளுடன் ஏற்றங்காண்பது உறுதி
சொல்லுக்கு பெறுமதியுண்டு
எல்லா நலனும் பெற்று நீடூழி வாழ்வீர்காண்.

**சேவை விபரம்**

- மு/முல்லைத்தீவு H.B.T.M.S - ஆசிரியர் 06.08.1988 - 31.12.1989
- யா/ பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை 01.01.1990 - 31.12.1991
- மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி-ஆசிரியர் 01.01.1992 - 31.06.1998
- வலயக் கல்வி பணிமனை, முல்லைத்தீவு ஆசிரிய ஆலோசகர் - கத்தோலிக்கம் 01.07.1998 - இன்றுவரை

ஊழியர் நலன்புரிச் சங்கம்
வலயக் கல்வி அலுவலகம் முல்லைத்தீவு.

(C-1989)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புன்னாலைக்...

துக்கு வருகை தந்த மகனை ஏற்று வதற்காக பலாலி வீதி ஊடாக சென்று கொண்டிருந்தபோது சுன்னாகத்தில் இருந்து புத்தூர்ச்சந்தி நோக்கி அதி வேகமாக வந்த ஹயஸ் வாகனம் தெற்குப் புன்னாலைக்கட்டுவன் சந்தியில் பயணித்தவரை மோதியுள்ளது.

இதில் அவர் ஸ்தலத்திலே உயிரிழந்த நிலையில் சடலம் சுன்னாகம் பொலிஸாரால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பில் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபால சிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## இரண்டு புதிய...

டத்தரணி கே. எம். எஸ். திசாநாயக்க மற்றும் சட்டத்தரணி ஆர். பி. ஹெட்டியாராச்சி ஆகியோர் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் கலந்து கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## யாழ்ப்பாணக்...

தேசிய மக்கள் சக்தியின் ஊடக இணைப்பாளருக்கு முதலில் வரலாற்றைக் கற்பிக்க வேண்டும். கொழும்பு, நீர்கொழும்பு போன்ற பகுதிகளில் தமிழர்கள் குடியேற்றப்பட்டிருப்பதாக அவர் கூறுகின்றார்.

குறித்த பகுதிகளில் தமிழர்கள் பரம்பரையாக வாழ்ந்தார்களா? அல்லது குடியேற்றப்பட்டார்களா? என்பதை முதலில் அவருக்குப் போதியுங்கள் என தெரிவித்துள்ளார். (ம-7)

## பொலிஸார்...

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

பெரிய நீலாவணைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிப்பதற்கு சென்ற பெண் ஒருவர் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியதாகவும், இதனால் பாதிப்படைந்த பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் பாராளுமன்றில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

அவரைத் தொடர்ந்து கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், குறித்த தாக்குதல் சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்தார்.

அவர்கள் இருவருக்கும் பதிலளித்துக் கருத்துரைத்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, குறித்த சம்பவம் தொடர்பான விபரங்களைச் சமர்ப்பித்தால் உடனடியாக விசாரணையை நடத்த முடியும் எனக் குறிப்பிட்டார்.

அத்துடன் பொலிஸ் நிலையங்களில் அவ்வாறான தாக்குதல்களுக்கு ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை எனவும் குறிப்பிட்டார். (ம-7)

## ரூ.4,691...

பகுதியில் அரச செலவுகள் குறித்து இதில் கணிப்பிடப்பட்டுள்ளதுடன், மொத்த செலவு 4,691 பில்லியன்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இம்முறை ஜனாதிபதியின் கீழ் இயங்கும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சுக்கே அதிக நிதி ஒதுக்கீடு இடம் பெற்றுள்ளது. இந்த அமைச்சுக்கு 484 மீண்டுவரும் செலவு எனவும் 229 மூலதனச் செலவு எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. அமைச்சுகளுக்கு நிதி ஒதுக்கீடுகள் இடம்பெற்றுள்ளன.

சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு பெப்ரவரி 17ஆம் திகதி இடம் பெறும்.

இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் பெப்ரவரி 18ஆம் திகதி முதல் பெப்ரவரி 25ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதுடன், இரண்டாம் வாசிப்பு வாக்கெடுப்பும் பெப்ரவரி 25ஆம் திகதி இடம்பெறும்.

பெப்ரவரி 27ஆம் திகதி முதல் மார்ச் 21 ஆம் திகதிவரை சட்டமூலம் மீதான குழுநிலை விவாதம் இடம்பெற்று மார்ச் 21ஆம் திகதி மூன்றாம் வாசிப்புடன் சட்டமூலம் நிறைவேற்றப்படும். (ம-7)

## ஒரு வயது...

டிருந்த போது கட்டிலின் கீழ் இருந்த சிறிதளவு மண்ணெண்ணையை குழந்தை குடித்துள்ளதுடன் உடலில் ஊற்றி மண்ணெண்ணையை போத்தலை வைத்து விளையாடிக் கொண்டிருந்தது.

திடீரென மயங்கிய குழந்தையை கோப்பாய் வைத்தியசாலைக்கு கொண்டுசென்று பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்த நிலையிலும் குழந்தை சிகிச்சை பலனின்றி பிற்பகல் 4.00 மணியளவில் உயிரிழந்துள்ளது.

இம் மரணம் தொடர்பில் யழ். போதனா வைத் தியசாலை திடீர் மரண விசா ரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தர விட்டார். (ம-7,60)

## இன, மத...

தொடர்பில் பாராளுமன்ற வளாகத்தில் நேற்று பிரதமரிடம் ஊடகவியலாளர்கள் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

"இங்கு இன, மத வன்முறைகளை மீண்டும் தூண்ட முயலவோர் தொடர்ந்து சிறைகளில் அடைக்கப்படுவார்கள். அவர் "எவராக இருந்தாலும் குற்றமிழைத்தவர்கள் சட்டத்தின் பிரகாரம் தண்டிக்கப்படுவார்கள்.

"அப்படியானவர்களுக்கு நீதிமன்றம் வழங்கும் தண்டனையை தேசிய மக்கள் சக்தி அரசு வரவேற்கும் என்றும் தெரிவித்தார். (ம-7)

## ஞான...

டுள்ளார்.

ஜூலை 16, 2016 அன்று, கிருலப்பனையில் நடந்த செய்தியாளர் சந்திப்பில், "இஸ்லாம் ஒரு புற்றுநோய் அதைத் துடைத்தெறிய வேண்டும்" என்று கூறினார்.

ஞானசார தேரர் அறிவித்து இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் செயற்பட்டதாக குற்றவியல் சட்டத்தின் 291ஆவது பிரிவின் கீழ் பொலிஸார் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# கோப் குழுவின் தலைவராக நிஷாந்த சமரவீர



பொது நிறுவனங்கள் பற்றிய குழுவின் (COPE) தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் நிஷாந்த சமரவீர ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பொது நிறுவனங்கள் தொடர்பான குழு நேற்றுப் பிற்பகல் 2.00 மணிக்கு பாராளுமன்றத்தில் கூடியபோதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.01.09
சீட்டிழுப்பு இலக்கம் 5711
K 0 0 3 2 0 3
அத சம்பத
K 3 2 0 3
சீட்டிழுப்பு இலக்கம் 286
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.01.09
சீட்டிழுப்பு இலக்கம் - 1741
O 07 32 65 66 O
Double Chance 12234

மெகா பவர்
திகதி 09/01/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2059
Z 16 08 35 52 64

லக்கி 7 VIP
திகதி 2025.01.09
சீட்டிழுப்பு இலக்கம் 537
H 5 5 9 3 7 5 H

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3953
சீட்டிழுப்பு திகதி 09.01.2025
Q 27 36 44 50
Q
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.01.09
சீட்டிழுப்பு இலக்கம் 1020
கன்னி 02 08 24 31 கன்னி
31884 01

உத்தியோகபூர்வ முடிவுகள்
09.01.2025 வெற்றி வாரம் 419
Y 8 2 1 8 7 4
72073
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.28,825,720.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2685
சீட்டிழுப்பு திகதி 2025.01.09 தினம் வியாழக்கிழமை
31 45 46 48 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.78,958,207.20
DLB

சனிதா Shanida
திகதி 09.01.2025 வெற்றி வாரம் 4846
03 11 30 50 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,333,212.00
51073
www.dlb.lk

சசிரி
வெற்றி வாரம் 596
சீட்டிழுப்பு திகதி 09.01.2025 வியாழக்கிழமை
21 35 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு வாரம் 4397
சீட்டிழுப்பு திகதி 09.01.2025 தினம் வியாழக்கிழமை
07 25 28 48
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,249,080.40
152321
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 33 11 30 49 64
1861
09.01.2025 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.561,357,150.60
DLB

வியாழக்கிழமை
வெற்றி வாரம் 2511
சீட்டிழுப்பு திகதி 2025.01.09
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.61,418,164.80
அத கோடிபதி ADA KOTIPATHI
13 39 57 62 C
996487
DLB www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Technicians தேவை

கொழும்பில் இயங்கி வரும் டிஷ் ஆன்டெனா விற்பனை மற்றும் சர்விஸ் செய்யும் கடைக்கு டிஷ் ஆன்டெனா பிட்டிங்கில் நன்கு அனுபவமுள்ள மோட்டார் சைக்கிள் மற்றும் ஆட்டோ டிரைவிங் செய்யக்கூடிய Technicians ஒருவர் உடன் தேவை. தங்குமிடம் உண்டு, சம்பளம் மற்றும் கமிஷன் உட்பட Rs.100,000/= வரை சம்பாதிக்க முடியும். தொடர்பு கொள்ளவும். (525)

T.ராஜ்குமார் : 077 771 0785

அறுசுவை உணவுகளிற்கு சுத்தமான

## றோயல் நெய்

Royal

உங்கள் வாழ்வின் இனிய தருணங்களை தரமான றோயல் நெய் கொண்டு தயாரித்த அறுசுவை உணவுகளுடன் கொண்டாடி மகிழுங்கள்

ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.



குறிப்பு :- யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் சுப்பர்மார்க் கட்களிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம் (C-1993)

Marketed By :-
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 2222 567

Packed By:-
Royal Industries®


## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் கொழும்புக் கிளை

### பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப்பரிசில்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையின் அறக்கட்டளை, கல்வி வளர்ச்சியை நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டு, கடந்த 2001ஆம் ஆண்டு தொடக்கம் பழைய மாணவர் சங்கங்களும், பழைய மாணவர்களும் நிதிப்பங்களிப்புடன் திறமை வாய்ந்த, உதவி தேவைப்படும் மாணவர்களுக்காக, பின்வரும் புலமைப்பரிசில்களை வழங்கி வருகின்றது.

1. மத்திய கல்லூரியிலிருந்து இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாகிய மாணவர்களுக்கானது.
2. மத்திய கல்லூரியில் கல்வி பயிலும் உயர்தர மாணவர்களுக்கானது.

இம்முறையும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியூடாக க.பொ.த. (உ/த) - 2023 (2024) பரீட்சைக்கு தோற்றி, இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகிய மாணவர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்களை கல்லூரி அலுவலகத்தில் அல்லது www.jccoba.com எனும் இணையத்தளத்தினூடாகப் பெற்று விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் கல்லூரியில் கையளிக்க வேண்டிய இறுதித் திகதி 31-01-2025.

செயலாளர்,
புலமைப்பரிசில் செயற்குழு
தொ.பே. இல.: 0714475133

மின்னஞ்சல்: scholarship@jccoba.com
இணையத்தள முகவரி: www.jccoba.com (C-1987)


## யோகட் கொள்வனவுகள்

பாடசாலைகளுக்கு அங்கர் யோகட் மொத்த கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். அதிபர்/ ஆசிரியர் எம்மை தொடர்பு கொள்ளலாம். (530)



48/= 80/=

Happy Supermarket
உரும்பிராய்

+94 76 800 65 00

KBK

## A/L 2025/2026 DAY CLASS

King of Accounts (ACCOUNTING)
உங்கள் ஆசிரியர்

MR.BALAKAJEN SLTS
B.com(Jaf), H.N.Dip-in-Acc(ATI), Dip-in-Edu (OUSL), M.com (Hons) Acc.spl

புதிய தேர்ச்சிகள் ஆரம்பம் :
11.01.2025 Saturday

- NEC - பெருமாள் கோயில் அருகில்
- ST ECONOMICS - மீசாலை
- KBK - கொழும்புத்துறை
- KBK - கந்தர்மடம்
- KBK - ZOOM (இலங்கை முழுவதும்)

நேர அட்டவணைகளுக்கு
(TAMIL AND ENGLISH MEDIUM)
077 452 0043 (522)


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## சிவசுந்தரம் வர்ஷனன்

திதி – மார்கழி பூர்வபக்ஷ துவாதசி
10.01.2025

வளரும் வயதில் வர்ஷனன் வாழ்வில்
ஏற்றமும் எழிலும் சீர் பெறக் கண்டோம்
காலம் கொடுத்த கொடுந்துயர் அதனால்
ஆண்டுகள் இரண்டு ஆனது கவலையில். (595)

"வர்ஷ மஹால்"
23, உடுவில் வீதி,
மானிப்பாய்.

என்றும் நீங்கா நினைவுடன்
அப்பா, அம்மா, அக்கா
மற்றும் உறவினர்கள்


## வேலைவாய்ப்பு (Only Females)

- முன்பள்ளி ஆங்கில ஆசிரியர் (ஆங்கிலம் சரளமாகப் பேசக் கூடியவர்)
- சிங்கள ஆசிரியர் (ஆரம்ப எழுத்துப் பயிற்சி எழுதக் கூடியவரும் உரையாடக் கூடியவரும்)
- கணினி நிலைய ஆசிரியர் (photoshop, page maker, Corel draw நன்கு தெரிந்தவர், பழக விரும்பு பவர்களுக்கு 3 மாத காலப் பயிற்சிகள் வழங்கப்படும்)

புத்தூர், யாழ்ப்பாணம், இனுவில், தெல்லிப்பளை போன்ற இடங்களுக்கு ஆட்கள் தேவைப்படுகின்றது. நேர்முகத் தேர்வு நடைபெறும் திகதி 11.01.2025 ம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் 11.00 மணி வரை நடைபெறும். (உரிய ஆவணங்களுடன் சமூகமளிக்க வேண்டும்) நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் : சிவபதி, கே.கே.எஸ் றோட், இனுவில். (2948)

077 377 0524

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## வாடகைக்கு

வீடு/ காரியாலய உபயோகத்திற்கு 55 அடி நீளம் அகலம் 44 அடி பரப்புடைய மாடி வீடு வாடகைக்கு உண்டு. இடம் : டச்சு வீதி, சாவகச்சேரி

தொடர்புகளுக்கு : (C-1992)
077 675 7249

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்திய Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-1999)


# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி ஜெயந்தினி தவராசா அவர்களின்
அன்புக் கணவர்



## திரு. சின்னத்தம்பி தவராசா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (2983)

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவுத் துயருடன்...
சேவையாளர் சங்கம்
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.